குமரன் பிரிண்டர்ஸ்
தினசரி நாளிதழ், வார இதழ், மாத இதழ்
குறைந்த விலையில்
தரமான முறையில் அச்சடித்து தரப்படும்.
தொடர்புக்கு
CMDA, Flat No.D28, Terminal complex,
Madhavaram,Chennai - 600110.
செல் : 7904165557

RNI.Reg.No.TNTAM/2019/78889

# உள்ளாட்சி சாரல்

* சென்னை * மதுரை

உள்ளாட்சியே இந்தியாவின் நாடித்துடிப்பு

காலை நாளிதழ்

சென்னை உள்ளாட்சி : 7 சாரல் : 110 26.08.2025 செவ்வாய்க்கிழமை ஆசிரியர்: M.காளியம்மாள் ullatchisaral@gmail.com பக்கம் : 8 விலை ரூ.7

# அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தேர்வான 89 பேருக்கு பணி ஆணைகள்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வழங்கினார்

சென்னை, ஆக.26:

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 89 நபர்களுக்கு தமிழக முதல்வர் ஸ்டாலின் பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

இது குறித்து அரசு வெளியிட்ட செய்திக் குறிப்பு: தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமைச் செயலகத்தில், தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் துணை ஆட்சியர், காவல் துணை கண்காணிப்பாளர் உள்ளிட்ட தொகுதி 1ல் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்ட 89 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்.

தமிழக முதல்வர் ஸ்டாலின் தலைமையிலான அரசு பொறுப்பேற்றதிலிருந்து, கடந்த நான்கு ஆண்டுகளாக தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம், சீருடைப் பணியாளர் தேர்வு வாரியம், மருத்துவப் பணியாளர் தேர்வு வாரியம். ஆசிரியர் தேர்வு வாரியம் உள்ளிட்ட தேர்வு முகமைகள் வாயிலாக 79,940 நபர்களுக்கும் பல்வேறு அரசுத் துறைகளில் நேரடி நியமனம், உள்ளாட்சி அமைப்புகள், அரசுத் துறை நிறுவனங்கள் என பல்வேறு அமைப்புகளின் வாயிலாக 38,110 நபர்களுக்கும், என மொத்தம் 1,18,050 நபர்களுக்குப் பணி நியமனம் வழங்கப் பட்டுள்ளது.





அதன் தொடர்ச்சியாக, தமிழ்நாடு அரசு பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதிIக்கான முக்கிய பணியிடங்களுக் கானபணிகளில்15துணை ஆட்சியர்கள், 23 காவல் துணை கண்காணிப்பாளர்கள், 14 உதவி ஆணையர்கள் (வணிக வரி), 21 கூட்டுறவு சங்கங்களின் துணைப் பதிவாளர்கள், 14 உதவி இயக்குநர்கள் (ஊரக வளர்ச்சி), ஒரு மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலர் மற்றும் ஒரு மாவட்ட அலுவலர் (தீயணைப்பு மற்றும் மீட்பு பணிகள்) என மொத்தம் 89 பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்பட்டவர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிடும் அடையாளமாக தமிழக முதல்வர் ஸ்டாலின் இன்றைய தினம் 20 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார். பணி நியமன ஆணைகளை பெற்றுக் கொண்டவர்கள், முதல்வருக்கு நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

அகில, இந்திய பணிகள் மற்றும் மத்திய அரசு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்படும் பணியாளர்களுக்கு நடத்தப்படும் அடிப்படை பயிற்சியை (Foundation Course) போன்றே தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் மூலம் தொகுதி 1ல் அடங்கிய பல்வேறு பணியிடங்களுக்கு தேர்வு செய்யப்படும் அலுவலர்களுக்கும் பயிற்சி வழங்கப் பட வேண்டும் என்று முதல்வர் அறிவுறுத்திய தன்பேரில், கடந்த ஆண்டு முதல், தொகுதிI அலுவலர்களுக்கு பொது அடிப் படை பயிற்சி ஆரம்பிக் கப்பட்டு, தற்போது பணி நியமனம் வழங்கப்பட்டுள்ள 89 தொகுதி1 அலுவலர்களுக்கு. வரும் செப் டம்பர் 8ம் நாள் முதல் சென்னை, அண்ணா நிர்வாகப் பணியாளர் கல்லூரியில் (Anna Administrative Staff College) பொது அடிப்படைப் பயிற்சி (Common Foundation Course) வழங்கப் பட உள்ளது.

இந்நிகழ்ச்சியில், மனித வள மேலாண்மைத் துறை அமைச்சர் கயல்விழி செல்வராஜ், தலைமைச் செயலாளர் முருகானந்தம், மனித வள மேலாண்மைத் துறை செயலாளர் சமயமூர்த்தி மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர் என்று செய்திக் குறிப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

# "2026 தேர்தலுடன் திமுக கதை முடிந்துவிடும்" இபிஎஸ்

சென்னை, ஆக.26:

திருச்சிராப்பள்ளி மாவட்டம், மணச்சநல்லூர், துறையூர் தொகுதிகளையடுத்து முசிறி பேருந்து நிலையம் அருகே குழுமியிருந்த ஏராளமான மக்களிடம் அதிமுக பொதுச்செயலாளர் எடப்பாடி பழனிசாமி உரையாற்றினார். அப்போது பேசிய அவர், “அதிமுக ஆட்சியில் மக்கள் ஏற்றம் பெற்றார்கள், தமிழகம் ஏற்றம் பெற்றது. திமுகவுக்கு வீட்டு மக்கள் தான் முக்கியம். ஒரு குடும்பம் வாழ 8 கோடி மக்களை அடிமைபடுத்திக் கொண்டிருக்கிறார்கள்.



அதிமுக ஜனநாயகமுள்ள கட்சி, விசுவாசமாக உழைத்தால் சாதாரண தொண்டன் கூட உச்சப் பதவிக்கு வரமுடியும். திமுகவில் வரமுடியுமா? கருணாநிதி குடும்பத்தில் உள்ளவர்கள் மட்டுமே வரமுடியும். நான் படிப்படியாக பொதுச்செயலாளராக உயர்ந்தேன். இதுதான் அதிமுக. மக்களை, உழைப்பாளர்களை மதிக்கக்கூடிய கட்சி.

திமுகவில் ஸ்டாலின், உதயநிதி, கனிமொழி என மூவரும் முக்கிய பதவிகளை எடுத்துக்கொண்டனர். ஆட்சி அதிகாரத்தில் தமிழகத்திலும் மத்தியிலும்கருணாநிதிகுடும்பம் மட்டும்தான் வரமுடியும். அங்கே அப்படி என்றால், இங்கு அமைச்சர் நேருவும் அப்படித்தான். கருணாநிதி குடும்பம் மட்டும்தானா, என்னுடைய குடும்பத்திலும் வாரிசு இருக்க வேண்டும் என்பதற்காக நேரு தன் மகனை எம்பியாக்கினார்.

ஆனால் அதிமுகவில் பெயின்டராகவும், டாஸ்மாக் பணியாளராகவும் இருந்தவர்களுக்கு எம்.எல்.ஏ. பதவி கொடுத்தோம். மதம், ஜாதி அடிப்படையில் அதிமுக செயல்படுவதில்லை. வாரிசு அரசியலுக்கு முற்றுப்புள்ளி வைக்கும் தேர்தல் இது. அமைச்சர் ரகுபதி பேட்டி கொடுக்கிறார். ஸ்டாலினுக்குப் பிறகு உதயநிதி தான் முதல்வராக வருவாராம். 2026 தேர்தலில் கருணாநிதி குடும்பத்துக்கு இடமில்லை, சம்மட்டி அடி கிடைக்கும்.

குடும்பத்துக்கு வாய்ப்பு ஸ்டாலினுடன் முடிந்துவிட்டது. அதிமுகதான் ரகுபதிக்கு அடையாளம் கொடுத்தது. இங்கிருந்து போன ரகுபதி இன்று கொத்தடிமை போல அறிக்கையை விஷமத்தனமாகக் கக்குகிறார். இந்த தேர்தலுடன் திமுக கதை முடிந்துவிடும்.

முசிறியில் விவசாயம் சார்ந்த பணிகள்தான் அதிகம். ஒரு பகுதி மேடானது, ஒரு பகுதி வயல் பகுதி. விவசாயிகள், விவசாயத் தொழிலாளிகளுக்கு நிறைய திட்டங்கள் கொடுத்தோம். தொடக்க வேளாண் சங்கத்தில் விவசாயிகள் பெற்ற பயிர்க்கடன் ஒரே அதிமுக ஆட்சியில் இரண்டுமுறை தள்ளுபடி செய்தோம். விவசாயிகளுக்காக அதிமுக ஆட்சியில் குடிமராமத்து திட்டம் கொண்டுவரப்பட்டது. அதன்மூலம் ஏரி, குளங்கள், கண்மாய்கள் தூர்வாரப்பட்டு நீர் தேக்கப்பட்டது. அதிலிருந்துகிடைத்தவண்டல்மண்விவசாயத்துக்குப் பயன்பட்டது. ஒருபக்கம் ஏரிகள் ஆழமாகின, இன்னொரு பக்கம் விவசாயிகளுக்கு நல்ல விளைச்சல் கிடைத்தது.

விவசாயிகள் எந்நேரமும் மோட்டாரை பயன்படுத்த ஏதுவாக மும்முனை மின்சாரம் 24 மணி நேரம் கொடுத்தோம். இன்று ஷிப்ட் முறையில் மின் விநியோகம் செய்யப்படுவதால் இரவு வேளையில் பயிர்களுக்கு தண்ணீர் பாய்ச்ச முடியாத நிலை உள்ளது. இந்த பகுதியில் தடுப்பணை கேட்டீர்கள், அதிமுக ஆட்சியில் விரிவான திட்ட அறிக்கை தயார் செய்யப்பட்டது, அதை திமுக ரத்துசெய்துவிட்டது, மீண்டும் அதிமுக ஆட்சி அமைந்ததும் அது நிறைவேற்றப்படும்.

கரோனா காலத்தில் விலை மதிக்கமுடியாத உயிர்களைக் காப்பாற்றினோம். நோயைப் பற்றி எதுவுமே தெரியாமல் நல்ல முறையில் சிகிச்சை கொடுத்தோம். அச்சமயம் பாரத பிரதமர் மோடி எல்லா முதல்வர்களிடம் காணொளி காட்சி மூலம் பேசியபோது, தமிழ்நாடு அரசு சிறப்பாக செயல்படுகிறது, தமிழ்நாட்டைப் பின்பற்றுங்கள் என்று கூறினார்.

கரோனா காலத்தில் ஓராண்டு ரேஷனில் விலையில்லா பொருட்கள் கொடுத்தோம், குடும்ப அட்டைக்கு 1000 ரூபாய் கொடுத்தோம். கர்ப்பிணிதாய்மார்கள், மாற்றுத்திறனாளிகள், முதியோர்கள் என 7 லட்சம் பேருக்கு மூன்று வேளை உணவு கொடுத்தோம். தைப் பொங்கலை அனைவரும் மகிழ்ச்சியாகக் கொண்டாட பொங்கல் பரிசு 2500 ரூபாய் கொடுத்தோம். கரோனா காலத்தில் கல்லூரி மாணவர்களுக்கு ஆன்லைன் தேர்வு நடத்தினோம், பள்ளி மாணவர்களின் நலன் கருதி ஆல்பாஸ் போட்டுக்கொடுத்தோம்.

கைத்தறி நெசவாளர்களுக்கு அதிமுக ஆட்சியில் 200 யூனிட் மின்சாரமும், விசைத்தறி நெசவாளர்களுக்கு 750 யூனிட் மின்சாரமும் மானியம் கொடுத்தோம். பசுமை வீடுகள், கைத்தறி ஆதரவு திட்டம், கைத்தறி துணிகள் தேக்கமடைந்தபோது 350 கோடி ரூபாய் மானியம் கொடுத்தோம். கோரைப்பாய் உற்பத்தி இங்கு அதிகமாக உள்ளது, கைத்தறி நெசவாளர்களுக்கு மின் இணைப்புக்கு மானியம் கொடுப்பதுபோல கோரைப்பாய் நெசவாளர்களுக்கும் மின் இணைப்பு யூனிட்டுக்கு மானியம் கொடுப்போம்.

திமுக அரசு ஐந்தாண்டு முடியும் தருவாயில் 5 லட்சத்து 38 ஆயிரம் கோடி கடன் வாங்கியுள்ளது. கடன் வாங்கியதில்தான் திமுக சாதனை படைத்திருக்கிறது. 73 ஆண்டு கால தமிழக ஆட்சி வரலாற்றில் எத்தனையோ அரசுகள் மாறி மாறி ஆட்சிக்கு வந்துள்ளன. 2021ம் ஆண்டு வரை ஒட்டுமொத்தமாக இருந்த கடன் 5 லட்சத்து 15 ஆயிரம் கோடி மட்டுமே, ஆனால்அதைவிடதிமுகவின் இந்த ஐந்தாண்டு கால கடன் சுமை அதிகம். நம்மை ஸ்டாலின் கடனாளியாக்கி விட்டார். வரி போட்டு தான் இந்த கடனை அடைப்பார்கள். கரோனாவில் எதுவுமே இல்லாமல் அரசு நடத்தினோம், விலைவாசி உயராமல் பார்த்துக்கொண்டோம். திமுக ஆட்சியில் எந்த சிக்கல்களும் இல்லை. ஆனாலும் தொடர்ந்து கடன் வாங்குகிறார்கள். கடன் வாங்குவதில் முதல் மாநிலம் தமிழ்நாடு. ஸ்டாலின் திறமையற்ற முதல்வர் என்பதற்கு இதுவே சான்று.

2021 சட்டமன்றத் தேர்தலுக்கு முன் தனது தேர்தல் அறிக்கையில் 525 அறிவிப்புகளை ஸ்டாலின் வெளியிட்டார். அவற்றில் 10% கூட நிறைவேற்றவில்லை, ஆனால் 98% நிறைவேற்றப்பட்டுவிட்டதாக ஸ்டாலினும், அமைச்சர்களும் பச்சை பொய் சொல்கிறார்கள். 100 நாள் வேலைத்திட்டம் 150 நாளாக உயர்த்தப்படும் என்றார், சம்பளம் உயர்த்தப்படும் என்றார், ஆனால் செய்யவில்லை. கேஸ் சிலிண்டருக்கு மானியம் ரூ.100 கொடுப்பதாகச் சொன்னார்கள் கொடுக்கவில்லை.

அதுவும் புளியஞ்சோலையில் இருந்து ஐயாற்றில் செல்லும் நீரை மகாதேவி ஏரி, கலிங்கப்பட்டி ஏரி, தாபேட்டை ஏரியில் விடுவதற்கு கோரிக்கை வைத்திருக்கிறீர்கள். ரெட்டியார்பட்டி முதல் ஆராய்ச்சி சிட்டி வரை வாய்க்கால் தூர் வாரக் கேட்டிருக்கிறீர்கள். முசிறியில் பாதாள சாக்கடை திட்டம் கேட்டிருக்கீங்க, இவை எல்லாம் நிறைவேற்றித் தரப்படும். இவற்றை நிறைவேற்றித்தர அதிமுக அரசுக்கு வாய்ப்பு தரவேண்டும். மக்களைக் காப்போம் தமிழகத்தை மீட்போம். பைபை ஸ்டாலின்" என்று தெரிவித்துள்ளார்.

# பிஹாரில் வாக்கு திருட்டு நடைபெறுகிறது

## எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் காந்தி மீண்டும் குற்றச்சாட்டு

பாட்னா, ஆக.26:

பிஹாரில் வாக்கு திருட்டு நடைபெறுகிறது என்று காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி மீண்டும் குற்றம் சாட்டி உள்ளார். வரும் நவம்பரில் பிஹார் சட்டப்பேரவை த் தேர்தல் நடைபெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இதையொட்டி அந்த மாநிலத்தில் அண்மையில் வாக் காள ர் பட்டியல் சிறப்பு திருத் த ப் ப ணி மேற்கொள்ளப்பட்டு கடந்த 1ம் தேதி வரைவு வாக்காளர் பட்டியல் வெளியிடப்பட்டது. இதில் 65 லட்சம் பேரின் பெயர்கள் நீக்கப்பட்டுள்ளன.

இந்த சூழலில் வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணியை எதிர்த்து மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ராகுல் ஆளும் பாஜகவுக்கு ஆதரவாக மட்டுமே தேர் தல் ஆணையம் செயல்படுகிறது. வாக்காளர் சிறப்பு திருத்தப் பணியின் மூலம் பிஹாரில் வாக்கு திருட்டு நடைபெற்று இருக்கிறது. வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் நடைபெற்று இருப்பதாக அனைத்து கட்சிகளும் குற்றம் சாட்டி வருகின்றன. ஆனால் பாஜக மட்டும் மவுனம் காத்து வருகிறது. பாஜகவுக் கும் தேர்தல் ஆணையத்துக்கும் இடையே ரகசிய கூட்டணி நீடிக்கிறது.

மகாராஷ்டிரா, ஹரியானா, கர்நாடகாவின் வாக்காளர் பட்டியலில் முறைகேடுகள் நடைபெற்றன. தற்போது பிஹாரிலும் முறைகேடுகள் நடைபெற்று உள்ளன. இதை அனுமதிக்க மாட்டோம். பிர



காந்தி பிஹார் முழுவதும் 16 நாட்கள் பேரணி நடத்தி வருகிறார். அவர் பிஹாரின் அரரியா, புர்னியா பகுதியில் பேரணி நடத்தினார். அப்போது ராகுல் தலைமையில் மோட்டார் சைக்கிள் பேரணி நடைபெற்றது.

அரரியாவில் ராகுல் காந்தி பேசியதாவது: ஒரு நபருக்கு ஒரு வாக்கு என்று அரசியலமைப்பு சட்டம் கூறுகிறது. ஆனால் ஏழைகளின் வாக்குகள் பறிக்கப்பட்டு வருகின்றன. பிஹாரில் நடைபெற்ற வாக்காளர் பட்டியல் சிறப்பு திருத்தப் பணியில் லட்சக்கணக்கான ஏழைகளின் பெயர்கள் பட்டியலில் இருந்து நீக்கப்பட்டு உள்ளது. உயிரோடு இருப்பவர்கள், உயிரிழந்து விட்டதாக தேர்தல் ஆணையம் கூறுகிறது. ஏழைகள், பிற்படுத்தப்பட்ட மக்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டு உள்ளது.

பிரதமர் நரேந்திர மோடி வாக்கு திருட்டில் ஈடுபடுகிறார். இவ்வாறு ராகுல் காந்தி தெரிவித்தார்.

மத்திய அமைச்சர் சிராக் பாஸ்வான், ராகுல் காந்தியின் பேரணியை கடுமையாக விமர்சித்து வருகிறார். இதுகுறித்து ராஷ்டிரிய ஜனதா தள மூத்த தலைவர் தேஜஸ்வி யாதவிடம் நிருபர்கள் கேள்வி எழுப்பினர்.

அவர் கூறும்போது, ‘‘அமைச்சர் சிராக் குறித்து எதுவும் கூற விரும்பவில்லை. அவர் எனக்கு மூத்த அண்ணன் போன்றவர். அவர் இதுவரை திருமணம் செய்து கொள்ளவில்லை. விரைவில் அவர் திருமணம் செய்து கொள்ள அறிவுறுத்துகிறேன்'' என்றார். அப்போது குறுக்கிட்ட ராகுல் காந்தி, “இந்த அறிவுரை எனக்கும் பொருந்தும்'' என்று தெரிவித்தார்.

# கல்லூரணி கோயில் திருவிழா காவல்துறை அனுமதி மறுப்பு தென்காசி ஆட்சியரிடம் புகார் மனு




**தென்காசி, ஆக.26:** தென்காசி அருகே கல்லூரணி கிராமத்தில் 45 வருடங்களாக நடைபெற்று வரும் திருவிழாவிற்கு மதுரை உயர்நீதிமன்றம் அனுமதி அளித்த நிலையிலும் காவல்துறையினர் நடத்த விடாமல் இடையூறு செய்வதாக பொதுமக்கள் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு

தென்காசி மாவட்டம் கல்லூரனியை சேர்ந்த ராமர்செல்வன் மாவட்ட ஆட்சியரிடம் மனு ஒன்றை அளித்துள்ளார் அந்த மனுவில் ; கல்லூரனி கிராமத்திற்கு உட்பட்ட சின்னத்தம்பி நாடார் பட்டி கிராமத்தில் ஸ்ரீ சக்தி போத்தி மாடசாமி திருக்கோயில் அமைந்துள்ளது. ஆண்டு தோறும் திருவிளக்கு பூஜை, வில்லுப்பாட்டு, நையாண்டி மேளம், அன்னதானம் உள்ளிட்ட பல்வேறு நிகழ்ச்சிகளுடன் திருவிழா நடைபெறுவது வழக்கம். கடந்த 45 வருடங்களாக இந்த திருவிழா எந்த ஒரு இடையூறும் இல்லாமல் நடைபெற்று வருகின்ற நிலையில் தற்போது திருவிழாவிற்கு காவல்துறை அனுமதி வழங்கவில்லை என கூறப்படுகிறது.

ஒவ்வொரு ஆண்டும் ஆடி மாதம் முதல் வெள்ளி திருவிழா நடைபெறுவது வழக்கம். ஆனால் அனுமதி வழங்கப்படாததால் மதுரை உயர்நீதிமன்ற கிளையில் திருவிழா நடைபெறுவதற்கு வழக்கு தொடரப்பட்ட நிலையில் காவல்துறை பாதுகாப்புடன் நடத்தலாம் என அனுமதி வழங்கப்பட் டுள்ளது.

அது மட்டுமல்லாமல் ஒரு காவலருக்கு ரூ 5000 வீதம் காவல் நிலைய கணக்கில் வரவு வைக்க வேண்டும் என்று உத்தரவிட்டது அந்த உத்தரவு குறித்து பாவூர்சத்திரம் காவல்துறையினர் எந்தவித நடவடிக்கையும் மேற்கொள்ளவில்லை.

எனவே தங்கள் மனு மீது எந்தவித நடவடிக்கையை எடுக்காமல் பாவூர்சத்திரம் காவல்துறையினர் அலைக்கழித்து வருகின்ற நிலையில் இது குறித்து உரிய நடவடிக்கை எடுத்து உயர்நீதிமன்ற மதுரை கிளை உத்தரவின்படி திருவிழா காவல் பணிக்கு வருகை தர உள்ள காவலர்களுக்கு காவல் நிலையத்திற்கு பணம் செலுத்த தயாராக உள்ளோம் எனவே நாங்கள் பாதுகாப்பான முறையில் கோயில் திருவிழா நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என கூறப்பட்டுள்ளது இந்நிகழ்வின் போது கோயில் வரிதாரர்கள் குமாரசாமி, மாரி, தங்கராஜ், மாரிமுத்து, கதிரவன், சதிஷ், பால்துரை ஆகியோர் உடனிருந்தனர்.




கன்னியாகுமரி மாவட்டம் நாகர்கோவில் ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி கலையரங்கில் நடைபெற்ற அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளி தலைமை ஆசிரியர்களுக்கான கலந்தாய்வு நிகழ்ச்சியில் கலந்து கொண்ட பள்ளி கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஷ் பொய்யாமொழி அவர்களுக்கு கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித் தலைவர் ஆர்.அழகுமீனா நினைவுப் பரிசு வழங்கினார்கள்



உலகத் தமிழ்க் கவிஞர்கள் கலை இலக்கிய சங்கம் சார்பில் சண்முகா மருத்துவமனை நிறுவனர் டாக்டர் பி.எஸ்.பன்னீர் செல்வம் அவர்களுக்கு "உழைப்புச் செம்மல்" எனும் விருதினை மாவட்ட அமைப்பாளர்."சேலத்து பாரதி" சொல்லரசர் வழங்கினார். அருகில் டாக்டர் பி.எஸ்.பி.யின் பேரன் உள்ளார்.

## டிவிஎஸ் ரேஸிங் ஏ.ஆர்.இ. ஜிபி சீசன் 2 சர்வதேச பந்தயம் செப்.15ல் தொடங்குகிறது

**ஒசூர், ஆக.26:** டிவிஎஸ் அப்பாச்சியின் பந்தயப் பாரம்பரியம் வெற்றி கரமான 20 ஆண்டு களைக் கடந்திருப்பதைக் கொண்டாடும் வகையில், இந்தியாவின் முன்னணி ஃபேக்டரி ரேசிங் குழு, டிவிஎஸ் ரேசிங் ஏஆர்இ ஜிபியின் இரண்டாவது சீசனை தொடங்க தயாராகி வருகிறது. டிவிஎஸ் ரேஸிங் ஏ.ஆர்.இ. ஜிபி இராண்டாம் பதிப்பு இந்த ஆண்டு செப்டம்பர் 15, 2025ல் நடைபெறவுள்ளது. முதல் பந்தய போட்டிக்கு கிடைத்த அபரிமிதமான வரவேற்பின் காரணமாக, இரண்டாம் பதிப்பு சர்வதேச தளத்திற்கான பந்தயமாக விரிவுப்படுத்தப் பட்டுள்ளது. இது டிவிஎஸ் அப்பாச்சியின் பந்தய குணாதிசயம் மற்றும் புதுமை அம்சங்களின் 20 ஆண்டு கால வெற்றிப்பயணத்தை பிரதிபலிக்கும் வகையில் அமைந்திருக்கிறது. இந்த வருட போட்டியானது மெக்சிகோ, கொலம்பியா, நேபாளம் என மூன்று சர்வதேச நாடுகள் மற்றும் இந்தியா முழுவதும் 17 நகரங்களில் நடக்கும் வகையில் திட்டமிடப் பட்டுள்ளது. சென்னையில் இந்த சீசனின் இறுதிப்போட்டியான கிராண்ட் பைனல் 2026 ம் ஆண்டு ஏப்ரல் மாதம் மெட்ராஸ் இன்டர்நேஷனல் சர்க்யூட்யில் நடைபெறுகிறது.

டிவிஎஸ் ரேஸிங், இந்த முறை டிவிஎஸ் ஒஎம்சி இந்தியா சேம்பியன்ஷிப் 2025ல் ஊடகங்களில் பணிப் புரியும் பெண்களுக்கான பிரத்தியேகமாக பந்தயப் பிரிவை அறிமுகப்படுத்தப்படுகிறது. மோட்டார் பந்தயத்தை ஆண்கள் மற்றும் பெண்கள் என அனைவருக்குமான பந்தயமாக முன்னெடுக்கும் டிவிஎஸ் ரேசிங் பாரம்பரியத்தின் முன்னோடித்துவமான குணாதிசயத்தை மேலும் வலுப்படுத்தும் வகையில் இம்முயற்சி அமைந்திருக்கிறது. 2016 ல் அனைவரும் பெண்களாக இருக்கும் உலகின் முதல் ரேசிங் அணியை அறிமுகப் படுத்தியது.

மேலும், டிவிஎஸ் ஓஎம்சி பெண்கள் பிரிவு போன்ற முயற்சிகளின் மூலம் அவர்களின் திறமையை வளர்த்தெடுத்து வருகிறது. இருசக்கர வாகன பந்தய வீராங்கனைகள் தேசிய அளவிலான பந்தயத்தில் பங்கேற்பதற்கான தனியான மேடையாகவும் இந்தப் போட்டி முக்கியத்துவம் பெற்றுவருகிறது, என்று டிவிஎஸ் மோட்டார் கம்பெனியின் ப்ரீமியம் பிஸ்னஸ் பிரிவின் தலைமை நிர்வாகி விமல் சம்பி தெரிவித்துள்ளார்.

### சென்னை பந்தய விழா:
## ஷேன் சந்தாரியாவின் மாபெரும் வெற்றி!



**சென்னை, ஆக.26:** சென்னை மெட்ராஸ் சர்வதேச சுற்றில் நடைபெற்ற இந்திய பந்தய விழா 2025 இன் 2வது சுற்று இரண்டாவது நாளில் பரபரப்பான நான்கு பந்தயங்கள் நடைபெற்றன. இதில், Chennai Turbo Riders அணியின் ஷேன் சந்தாரியா, தனது தீவிரமான ஓட்டத்தால் F4 இந்தியன் ரேஸ் 3இல் வெற்றி பெற்றார். இது அவரது அணிக்கு மிக முக்கியமான வெற்றியாகும்.

ஃபார்முலா 4 ரேஸ் 2இல், 8வது இடத்தில் இருந்து துவங்கிய கொல்கத்தா ராயல் டைகர்ஸ் ஓட்டுநர் இஷான் மாதேஷ் அதிரடியான மீட்டெடுப்புடன் முதலிடத்தை கைப்பற்றினார். அவரைத் தொடர்ந்து சாச்செல் ரோட்ஜ் மற்றும் காஜி மோட்லேகர் ஆகியோர் மேடையை நிரப்பினர். அதேபோன்று F4 ரேஸ் 4இல் சாச்செல் ரோட்ஜ் மீண்டும் தனது வேகத்தால் ரசிகர்களை கவர்ந்தார். மூன்றாவது இடத்தில் துவங்கி, முன்னிலை பெற்றார். லுவிவே சம்புட்லா இரண்டாம் இடத்திலும், சைசிவ சங்கரன் மூன்றாம் இடத்திலும் முடித்தனர்.

IRL ரேஸ் 2இல், சோஹில் ஷா (கொல்கத்தா ராயல் டைகர்ஸ்) தன்னிச்சையான ஓட்டத்துடன் வெற்றி பெற்றார், அக்ஷய் போஹ்ரா இரண்டாவதாகவும், ஜான் லான் காஸ்டர் மூன்றாவதாகவும் முடித்தனர்

### ரூ.8.09 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட
## புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடம் திறப்பு



**திண்டுக்கல், ஆக.26:** முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக்காட்சி வாயிலாக ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாட்சியில் ரூ.8.09 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்ட புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடத்தை திறந்து வைத்தார். அதனைத் தொடர்ந்து, விருப்பாட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில், உணவு மற்றும் உணவுப் பொருள் வழங்கல் துறை அமைச்சர் .அர.சக்கரபாணி கலந்துகொண்டார். மேலும், ஒட்டன்சத்திரம் முதல் கண்ணனூர் கே.சி பட்டி வழித்தடத்தில் புதிய பேருந்துகள் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார். உணவு மற்றும் உணவுப்பொருள் வழங்கல் துறை அமைச்சர் அர.சக்கரபாணி நாடாளுமன்ற உறுப்பினர் ஆர்.சச்சிதானந்தம் முன்னிலையில் ஒட்டன்சத்திரம் வட்டம், விருப்பாட்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துகொண்டு, புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையக் கட்டடத்தை குத்துவிளக்கேற்றி திறந்து வைத்தார். மேலும், ஒட்டன்சத்திரம் முதல் கண்ணனூர் கே.சி பட்டி வழித்தடத்தில் புதிய பேருந்துகள் இயக்கத்தை கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

# ...வர்த்தக செய்திகள்...

## கேரளா ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட் மற்றும் லார்ட்ஸ் ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட் இணைந்து உருவாக்கிய புதிய கூட்டுத்தாபனம்

### கேஎஎல் லார்ட்ஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட் இந்தியாவின் மின்சார போக்குவரத்து எதிர்காலத்தை முன்னேற்றும்




**சென்னை, ஆக.26:** கேஎஎல் லார்ட்ஸ் டெக்னாலஜீஸ் பிரைவேட் லிமிடெட், அடுத்த தலைமுறை மின்சார போக்குவரத்து நிறுவனம், இன்று அரளுமுடுவில் உள்ள கேரளா ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட் (KAL) தொழிற் சாலையில் தனது அதிகாரப்பூர்வ தொடக்க விழாவை நடத்தியது. இது, நாற்பது ஆண்டுகளுக்கும் மேலான உற்பத்தி அனுபவம் கொண்ட கேரளா அரசின் பொது நிறுவனம் கேரளா ஆட்டோமொபைல்ஸ் லிமிடெட் மற்றும் இந்தியாவின் மிகச் சுறுசுறுப்பான, புதுமையான மின்சார வாகன நிறுவனங்களில் ஒன்றான லார்ட்ஸ் ஆட்டோமோட்டிவ் பிரைவேட் லிமிடெட் இணைந்து உருவாக்கிய கூட்டுத்தாபனம்.

தொடக்க விழாவில் கேரளா மாநிலத்தின் தொழில், சட்டம் மற்றும் கயிறு துறை மந்திரி திரு. பி. ராஜீவ் கலந்து கொண்டார். நிகழ்ச்சிக்கு நெய்யாட்டின்கரை சட்டமன்ற உறுப்பினர் கே.அன்சலன் தலைமையாற்றினார். இவ்விழாவில் மேலும், ரமேஷ் மிக்லானி (இயக்குனர், லார்ட்ஸ் ஆட்டோமோட்டிவ்), வீர்சிங் (CEO, லார்ட்ஸ் ஆட்டோ மோட்டிவ், மற்றும் MD, KAL லார்ட்ஸ் டெக்னாலஜீஸ்), டாக்டர் சுனில் கோர் காவ்கர் (இயக்குனர், லார்ட்ஸ் ஆட்டோ மோட்டிவ்), அன்னி ஜுலா தோமஸ் IAS (OSD, தொழில் துறை), புள்ளுவிளா ஸ்டான்லி (தலைவர், ரிகிலி), ராஜ்மோகன் (தலைவர், நெய்யாட்டின்கரை நகராட்சி), எல். ராணி (தலைவர், அதியன்னூர் பஞ்சாயத்து), கே. அஜித் குமார் (நிர்வாக தலைவர், PT), அஜிதா கே.எஸ். (நகர சபை உறுப்பினர், அதியன்னூர்) உட்பட பல சிறப்புமிகு விருந்தினர்கள் கலந்துகொண்டனர்.

### சி.ஆர்.ஐ. பம்ப்ஸ், மகாராஷ்டிராவில்
## ரூ.320 கோடி மதிப்பிலான சோலார் பம்பிங் திட்டத்தை வென்றுள்ளது

**சென்னை, ஆக.26:** மகாராஷ்டிரா மாநிலத்தின் PM-KUSUM திட்டத்தின் கீழ், சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் ரூ.320 கோடி மதிப்பிலான 10,714 சோலார் பம்பிங் சிஸ்டங்களுக்கான ஒப்பந்தத்தை வென்றுள்ளது.


இந்த திட்டத்தின் மூலம் 3 பிறி முதல் 7.5 HP திறன் கொண்ட ஆஃப்கிரிட் சோலார் வாட்டர் பம்பிங் சிஸ்டங்கள் கிராமப்புற விவசாயிகளுக்காக வடிவமைக்கப் படும் மற்றும் நிறுவப் படும். இந்த பம்பிங் சிஸ்டங்கள், IoT தொழில்நுட்பத்துடன் கூடிய ரிமோட் கண் காணிப்பு அமைப்பும், 5 ஆண்டு பராமரிப்பு உத்தரவாதமும் கொண்டவை. கிராமப் புறங்களில் நிலையான நீர்ப்பாசனத்தை வழங்குவதில் இந்த முயற்சி முக்கியப் பங்காற்றும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஒப்பந்தம் தொடர்பாக, சி.ஆர்.ஐ. பம்ப்ஸ் தலைவர் திரு. ஜி. சௌந்தரராஜன் கூறியதாவது: "இந்த திட்டம் விவசாயத்திற்கு நீர் நிலைகளை மேம்படுத்துவதோடு, புதுப்பிக்கத்தக்க எரிசக்தி பயன்பாட்டையும் ஊக்குவிக்கிறது. இது ஒரு வணிக வெற்றியை விட, சமூக மேம்பாட்டை நோக்கி எடுக்கப்பட்ட முக்கிய முன்னேற்றம்.

இந்நிறுவனம் இந்தியா முழுவதும் 1.8 லட்சம் சோலார் பம்பிங் சிஸ்டங்களை வெற்றிகரமாக நிறுவியுள்ளது. இது 6,100 மில்லியன் kWh மின்சாரத்தைச் சேமித்ததோடு, 4.8 மில்லியன் டன் CO வெளியீட்டை தடுக்கும் சாதனையாக உள்ளது.

## உடலுக்கு ஆரோக்கியம் தரும் கலிபோர்னியா பாதாமுடன் ஓணம் பண்டிகையை மகிழ்ச்சியாக கொண்டாடுங்கள்

### ஊட்டச்சத்து மற்றும் ஆரோக்கிய ஆலோசகர் ஷீலாகிருஷ்ணசாமி வலியுறுத்தல்



**கோவை, ஆக.26:** கேரளாவின் வண்ணமயமா ஓணம், மகிழ்ச்சி மற்றும் ஒற்றுமைக்கான ஒரு பண்டிகையாகும். மக்கள் வீட்டின் முன் அழகான மலர்களால் அலங்கரித்து மன்னன் மகாபலி சக்கரவர்த்தியை வரவேற்கும் இந்த பண்டிகையானது ஆடம்பரமான விருந்துகள், பாரம்பரிய நடனங்கள் என பல்வேறு சிறப்புகளைக் கொண்டுள்ளது. இந்த ஆண்டு, இந்த சிறப்புகளுடன் கூடுதலாக உடலுக்கு ஆரோக்கியம் தரும் பாதாமை எடுத்துக் கொள்ளுங்கள் என்று ஊட்டச்சத்து நிபுணரும், ஆரோக்கிய ஆலோசகருமான ஷீலாகிருஷ்ணசாமி வலியுறுத்துகிறார். இது ஓணத்தின் பாரம்பரிய உணவாக இல்லாவிட்டாலும், பாதாம் அதன் ஊட்டச்சத்து காரணமாக பண்டிகைக்கு கூடுதல் சிறப்பாக இருக்கும் என்றும் அவர் தெரிவிக்கிறார். இது குறித்து அவர் மேலும் கூறுகையில், கலிபோர்னியா பாதாமில் வைட்டமின் ஈ, மெக்னீசியம், புரதம், ரிபோப்ளேவின் மற்றும் பாஸ்பரஸ் போன்ற முக்கியமான ஊட்டச் சத்துக்கள் அதிகமாக இருப்பதால், ஓணம் விருந்தின் ஊட்டச்சத்து மதிப்பை அதிகரிக்க விரும்பும் எவருக்கும் இது ஒரு சிறந்த தேர்வாகும். இவ்வளவு ஊட்டச் சத்துகள் நிறைந்த பாதாமை பல்வேறு உணவுகளில் சேர்க்கலாம் மற்றும் வாழை இலையில் பரிமாறப்படும் விதவிதமான சைவ உணவுகளின் விருந்தான பாரம்பரிய ஓணம் சத்யாவுடனும் சேர்த்து சாப்பிடலாம். பால்பாயசம், பரிப்பு பிரதமன் போன்ற இனிப்பு வகைகளில் பாதாமைச்சேர்க்கலாம் அல்லது கூட்டுகறி போன்ற சுவையான உணவுகளுக்கு அலங்காரமாக பயன்படுத்தலாம். பாதாமில் சுவையான மொறுமொறுப்பு மட்டுமல்லாமல், கால்சியம், மெக்னீசியம், பொட்டாசியம், துத்தநாகம், நியாசின் மற்றும் போலேட் ஆகிய சத்துகளும் உள்ளன. இந்திய மருத்துவ ஆராய்ச்சிகவுன்சில், தேசிய ஊட்டச்சத்து நிறுவனம் வழங்கும் இந்தியர்களுக்கான உணவு வழிகாட்டுதல்களின் படி, நல்ல ஆரோக்கியத்திற்காக பாதாம் போன்ற உணவுகளை தினமும் உட்கொள்ளலாம்.

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 6159/2025**

பழனியப்பன்
த/பெ.ஆதினமிளகி
க. எண். 2/281, மருதங்குடி
கிராமம், சிராவயல் அஞ்சல்,
சிராவயல் பஞ்சாயத்து,
திருப்பத்தூர் தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது தாயார் திருமதி (லேட் ) சரஸ்வதி க/பெ. ஆதினமிளகி என்பவர் கடந்த 03.08.2008 ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய உத்தரவிடக் கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனில் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 6161/2025**

பழனியப்பன்
த/பெ.ஆதினமிளகி
க. எண். 2/281, மருதங்குடி
கிராமம், சிராவயல் அஞ்சல்,
சிராவயல் பஞ்சாயத்து,
திருப்பத்தூர் தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது தகப்பனார் திரு (லேட் ) ஆதினமிளகி த/பெ.சிதம்பரம் என்பவர் கடந்த 10.03.2009 ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய உத்தரவிடக் கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனில் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 6160/2025**

வள்ளி
க/பெ.மூக்கையா
க. எண். 2381, மேலத்தெரு,
வெள்ளியங்குடி பட்டி கிராமம்,
K. நெடுவயல் பஞ்சாயத்து,
K. நெடுவயல் அஞ்சல்,
சிங்கம்புணரி தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
சிங்கம்புணரி
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது தகப்பனார் திரு.(லேட் ) முத்து பழனி என்பவர் கடந்த 05.12.1977 ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனில் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 6207/2025**

பிச்சி ,க/பெ. ஆறுமுகம்,
த/பெ ராமன்
க. எண். 12/56, புதுவயல்
மெயின் ரோடு, ஜீவா நகர்,
பாலையூர்,
கண்டனூர் பேரூராட்சி,
காரைக்குடி தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரைக்குடி
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது தந்தை திரு (லேட் ) ராமன் த/பெ ஆண்டியப்பன் என்பவர் கடந்த 05.06.1985 ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய உத்தரவிடக்கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனில் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 6208/2025**

பிச்சி ,க/பெ. ஆறுமுகம்,
த/பெ ராமன்
க. எண். 12/56, புதுவயல்
மெயின் ரோடு, ஜீவா நகர்,
பாலையூர்,
கண்டனூர் பேரூராட்சி,
காரைக்குடி தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரைக்குடி
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது தாயார் திருமதி (லேட் ) மலிக்கி க/பெ .ராமன் என்பவர் கடந்த 04.08.1995 ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய உத்தரவிடக்கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனில் முன்னி டப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 6163/2025**

சேது
க/பெ. (லேட்) ராஜேந்திரன்
க. எண்.2, நடுவலவு,
பனங்குடி கிராமம் , பனங்குடி
அஞ்சல், பனங்குடி
பஞ்சாயத்து, நடராஜபுரம் வழி,
காரைக்குடி தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
காரைக்குடி
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது கணவர் திரு (லேட் ) K. ராஜேந்திரன் த/பெ கருப்பையா என்பவர் கடந்த 27.12.2010 ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய உத்தரவிடக்கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம்.

அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனில் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 2609/2025**

ராஜேந்திரன்,
த/பெ. மாணிக்கம் (லேட்),
க.எண்.619.பி.
தாஸ்புரம் கிராமம்,
புலியடிதம்பம் அஞ்சல்,
தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.
செல்.8428166067.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது தகப்பனார் . தாஸ்புரம் கிராமம், உறுதிக்கோட்டை பஞ்சாயத்து. தேவகோட்டை வட்டம்.சிவகங்கை மாவட்டம்.திரு. கா.மாணிக்கம் த/பெ.காளிமுத்து என்பவர் கடந்த 10.08.1983ம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய உத்தரவிடக்கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனில் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 5660/2025**

கருப்பாயி,
க/பெ. மலைச்சாமி (லேட்),
க.எண.3/243,
கீழத்தெரு. செக்ககுடி கிராமம்,
செக்ககுடி அஞ்சல்,
தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தேவகோட்டை வட்டம்,
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது கணவர். செக்ககுடி கிராமம், மினிட்டாங்குடி பஞ்சாயத்து. தேவகோட்டை வட்டம்.சிவகங்கை மாவட்டம்.திரு. மலைச்சாமி த/பெ.சொக்கலிங்கம் . என்பவர் கடந்த 22.03.2010ம் தேதி மேற்படி முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவு செய்ய உத்தரவிடக்கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லைஎனில்முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

## கருநீலம் ஊராட்சியில்

# அரசு உயர்நிலைப் பள்ளியில் புதிய வகுப்பறை கட்டிடம் திறப்பு

## செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் திறந்து வைத்தார்




செங்கல்பட்டு, ஆக.26

செங்கல்பட்டு மாவட்டம் காட்டாங்குளத்தூர் ஒன்றியம் கருநீலம் ஊராட்சியில் உயர்நிலைப்பள்ளியில் தனியார் நிறுவனம் பங்களிப்பில் ரூபாய் 50 லட்சத்து 7000 மதிப்புள்ள உயர்நிலைப் பள்ளியில் மாணவர்களுக்கு பயன்பாட்டிற்காக கூடுதல் வகுப்பறை செங்கல்பட்டு சட்டமன்ற உறுப்பினர் வரலட்சுமி மதுசூதனன் காட்டாங்குளத்தூர் ஒன்றிய குழு தலைவர் உதயா கருணாகரன் கருநீலம் ஊராட்சி மன்ற தலைவர் சங்கர் திறந்து வைத்தனர்

அதனைத் தொடர்ந்து பள்ளி மாணவர்களுக்கு கலை மற்றும் நடன நிகழ்ச்சிகள் நடைபெற்றது இந்நிகழ்வில் பள்ளி தலைமை ஆசிரியர் அரசுகுமார் மற்றும் ஆசிரியர்கள் கிராம பொதுமக்கள் என ஏராளமான கலந்து கொண்டு சிறப்பித்தனர்

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 6164/2025**

கரு. கிருஷ்ணமூர்த்தி
த/பெ கருப்பையா
க. எண். 699, தெற்கு பட்டு
கிராமம், கண்டரமாணிக்கம்
பஞ்சாயத்து,
கண்டரமாணிக்கம் அஞ்சல்,
திருப்பத்தூர் தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது தாயார் திருமதி (லேட் ) சௌந்தரம் க/பெ. கருப்பையா என்பவர் கடந்த 10.06.1978 ம் தேதி அன்று மேற்படி முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய உத்தரவிடக் கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லை எனில் முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 6166/2025**

திருமால்
க/பெ. வைத்திலிங்கம்
க. எண். 37, மேலத்தெரு,
மேலப்பட்ட மங்களம் கிராமம்,
பட்டமங்கலம் பஞ்சாயத்து,
திருப்பத்தூர் தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
திருப்பத்தூர்
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது தந்தை திரு (லேட் ) சா.வீரப்பன் த/பெ சாத்தப்பன் என்பவர் கடந்த 14.07.1977ம் தேதி அன்று 754 தெற்கு பட்டு கிராமம், கண்டரமாணிக்கம் அஞ்சல், திருப்பத்தூர் தாலுகா, சிவகங்கை மாவட்டம் என்ற முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய உத்தரவிடக்கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதி மன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லைஎனில்முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மேன்மை மிகு வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றம், வருவாய் கோட்டாட்சியர் அலுவலகம், தேவகோட்டை.**
**எண்: ந.க.ஆ 2: 000000/2025**

P. இந்திரா
க/பெ பழனிக்குமார்
க. எண். 2/281, பெரிய
உஞ்சனை கிராமம்,
இருவினிவயல் அஞ்சல்,
தேவகோட்டை தாலுகா,
சிவகங்கை மாவட்டம்.
...மனுதாரர்
வட்டாட்சியர் அவர்கள்,
வட்டாட்சியர் அலுவலகம்,
தேவகோட்டை
சிவகங்கை மாவட்டம்
...எதிர்மனுதாரர்

**அறிவிப்பு**

மேற்படி முகவரியில் நிரந்தரமாக வசித்துவரும் மனுதாரர் தனது மாமனார் திரு.(லேட் ) காசி த/பெ ராமநாதன் என்பவர் கடந்த 17.07.2012ம் தேதி அன்று 2/32A, களபங்குடி கிராமம், புத்துரணி பஞ்சாயத்து, தேவகோட்டை வட்டம், சிவகங்கை மாவட்டம் என்ற முகவரியில் இறந்ததை எதிர்மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்புப் பதிவேட்டில் பதிவுசெய்ய உத்தரவிடக்கோரி சமூகம் வருவாய் கோட்டாட்சியர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்துள்ளார். இதில் எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் இந்த அறிவிப்பு வெளியான நாளிலிருந்து 15 தினங்களுக்குள் சமூகம் நீதிமன்றத்தில் தங்களது ஆட்சேபனையை எழுத்துப்பூர்வமாக அல்லது வழக்கறிஞர் மூலமாக தெரிவித்துக் கொள்ளலாம். அவ்வாறு ஆட்சேபனைகள் ஏதும் வரப்பெறவில்லைஎனில்முன்னிடப்பட்டுள்ள ஆவணங்களின் அடிப்படையில் மனுதாரர் கூறியுள்ளவாறு இறப்பினை பதிவு செய்ய சமூகம் நீதிமன்றத்தால் உத்தரவு பிறப்பிக்கப்படும் என்ற விபரம் இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

**நீதிமன்ற உத்தரவுப்படி...**

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மதுராந்தகம்**

பெருமாள் த/பெ ராஜி,
கதவு எண் .52, மேட்டுத்தெரு ,
படாளம் கிராமம் ,
மதுராந்தகம் வட்டம் ,
செங்கல்பட்டு மாவட்டம்
...மனுதாரர்
எதிர்
திரு .வட்டாட்சியர் அவர்கள் ,
மதுராந்தகம் வட்டம்.
...எதிர்மனுதாரர்

**பொது அறிவிப்பு**

மனுதாரரின் தந்தை ராஜி த/பெ. செங்கேயன் அவர்கள் கடந்த 07.05.2005 அன்று தனது 60வது வயதில் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம் ,படாளம் கிராமம், மேட்டுதெரு என்னும் விலாசத்தில் வீட்டில் இறந்து விட்டார்.எதிர் மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் குறிப்பிட்ட காலத்தில் அறியாமை காரணமாக பதிவு செய்யவில்லை. காலதாமதத்திற்கு மன்னிப்பு கோரியும், மேற்படி இறப்பினை பதிவு செய்ய உத்தரவிட கோரியும் மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் கனம் தீர்ப்பாயத்தில் நேரிலோ வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி இந்த அறிவிப்பினை கண்ட ஏழு நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ளலாம்.

**மனுதாரர்**
**பெருமாள் த/பெ ராஜி,**
**கதவு எண் .52, மேட்டுத்தெரு ,**
**படாளம் கிராமம் ,**
**மதுராந்தகம் வட்டம் ,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**
**செல் : 7339105520**

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மதுராந்தகம்**

திரு.எட்டியப்பன், த/பெ.கந்தசாமி,
நெ.377,பாமான் கேணி கிராமம்,
சீக்கினாங்குப்பம் அஞ்சல்,
செய்யூர் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்
...மனுதாரர்
எதிர்
உயர்திரு. வட்டாட்சியர் அவர்கள்,
செய்யூர்.
...எதிர்மனுதாரர்

**பொது அறிவிப்பு**

மனுதாரரின் தந்தை திரு.கந்தசாமி என்பவர் செங்கல்பட்டு மாவட்டம், செய செய்யூர் வட்டம், சீக்கினாங் குப்பம் அஞ்சல், பரமன்கேணி கிராமம் எண் 3 779(06/05/1975) அன்று தனது 65வது வயதில் மேற்கண்ட விலாசத்தில் வீட்டில் இறந்து விட்டார்.எதிர் மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் குறிப்பிட்ட காலத்தில் அறியாமை காரணமாக பதிவு செய்யவில்லை. காலதாமதத்திற்கு மன்னிப்பு கோரியும், மேற்படி இறப்பினை பதிவு செய்ய உத்தரவிட கோரியும் மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் கனம் தீர்ப்பாயத்தில் நேரிலோ வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி இந்த அறிவிப்பினை கண்ட ஏழு நாட்களுக்குள் தெரிவித்துக்கொள்ளலாம்.

**மனுதாரர்**
**திரு.எட்டியப்பன்**
**த/பெ கந்தசாமி,**
**நெ.377,பாமான் கேணி**
**கிராமம்,**
**சீக்கினாங்குப்பம் அஞ்சல்,**
**செய்யூர் வட்டம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**

**மாண்புமிகு வருவாய் கோட்டாட்சியர் அவர்கள் மதுராந்தகம்**

செல்வராஜ் த/பெ. துரைசாமி,
நெ.128,பிள்ளையார் கோயில்
தெரு, எல்.என்.புரம் கிராமம்,
பூதூர் அஞ்சல்,
மதுராந்தகம் வட்டம்,
செங்கல்பட்டு மாவட்டம்.
...மனுதாரர்
எதிர்
திரு .வட்டாட்சியர் அவர்கள் ,
மதுராந்தகம்.
...எதிர்மனுதாரர்

**பொது அறிவிப்பு**

மனுதாரரின் தந்தை துரைசாமி த/பெ கோபால் அவர்கள் கடந்த 17.12.1987 அன்று தனது 75வது வயதில் செங்கல்பட்டு மாவட்டம், மதுராந்தகம் வட்டம், எல்.என்.புரம் கிராமம் என்னும் விலாசத்தில் வீட்டில் இறந்து விட்டார்.எதிர் மனுதாரர் அலுவலகத்தில் உள்ள இறப்பு பதிவேட்டில் குறிப்பிட்ட காலத்தில் அறியாமை காரணமாக பதிவு செய்யவில்லை. காலதாமதத்திற்கு மன்னிப்பு கோரியும், மேற்படி இறப்பினை பதிவு செய்ய உத்தரவிட கோரியும் மதுராந்தகம் வருவாய் கோட்டாட்சியர் அலுவலகத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டு விசாரணைக்கு போடப்பட்டுள்ளது. எவருக்கேனும் ஆட்சேபனை இருந்தால் கனம் தீர்ப்பாயத்தில் நேரிலோ வழக்கறிஞர் மூலமாகவோ ஆஜராகி இந்த அறிவிப்பினை கண்ட ஏழு நாட்களுக்குள் தெரிவித்துக் கொள்ளலாம்.

**மனுதாரர்**
**செல்வராஜ்**
**த/பெ துரைசாமி,**
**நெ.128,பிள்ளையார்**
**கோயில் தெரு, எல்.என்.புரம்**
**கிராமம், பூதூர் அஞ்சல்,**
**மதுராந்தகம் வட்டம்,**
**செங்கல்பட்டு மாவட்டம்.**
**செல்:9629328888**

# கீரப்பாக்கம் ஊராட்சியில் விடுபட்ட 30 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க கோரி கோரிக்கை மனு



செங்கல்பட்டு, ஆக.26:

கீரப்பாக்கம் ஊராட்சியில் விடுபட்ட 30 குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க கோரி மாவட்ட கலெக்டரிடம் பொதுமக்கள் கோரிக்கை மனு கொடுத்தனர். செங்கல்பட்டு மாவட்டம் கூடுவாஞ்சேரி அடுத்த கீரப்பாக்கம் ஊராட்சியில், கீரப்பாக்கம், முருகமங்கலம், அருங்கால் ஆகிய கிராமங்கள் உள்ளன. இங்கு 15 ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர். இந்நிலையில், மாவட்ட ஆட்சியர் வளாகத்தில் நேற்று நடைபெற்ற மக்கள் குறை தீர்க்கும் நாள் முகாமில், கீரப்பாக்கம் ஊராட்சியில் விடுபட்ட 30 ஏழை, எளிய குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா வழங்க கோரி மாவட்ட கலெக்டர் சினேகாவிடம் கீரப்பாக்கம் ஊராட்சிக்கு உட்பட்ட 4வது வார்டு உறுப்பினர் சசிகலா தனசேகரன் தலைமையில் பொதுமக்கள் கோரிக்கை மனு கொடுத்தனர். அந்த மனுவில் கூறுகையில், கீரப்பாக்கம் ஊராட்சியில் குடிசை மற்றும் ஓட்டு வீடு கட்டி கடந்த 15 ஆண்டுகளுக்கு மேலாக குடும்பத்துடன் வசித்து வருகின்றோம்.

இந்நிலையில் கடந்த சில மாதங்களுக்கு முன்பு இலவச வீட்டு மனை பட்டா வழங்குவதற்காக வருவாய் துறையினர் சர்வே செய்தனர். ஆனால் கடந்த 9ம் தேதி தாம்பரத்தில் தமிழக முதல்வர் வழங்கிய இலவச வீட்டு மனை பட்டா பெயர் பட்டியலில் எங்களது பெயர்கள் விடுபட்டுள்ளது. எனவே விடுபட்ட 30 ஏழை, எளிய குடும்பங்களுக்கு இலவச வீட்டு மனை பட்டா கிடைக்க மாவட்ட கலெக்டர் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இவ்வாறு அந்த மனுவில் கூறி வலியுறுத்தினர். மனுவை பெற்றுக்கொண்ட மாவட்ட கலெக்டர் இதுகுறித்து உரிய நடவடிக்கை எடுப்பதாக பொது மக்களிடம் உறுதி அளித்தார்.

# கிருஷ்ணகிரி மாவட்ட விவசாயிகளுக்கான வாணி ஒட்டு அணைக்கட்டு திட்டம் கொண்டு வருவது எனது வாழ்நாள் லட்சியம்

## மாநிலங்களவை உறுப்பினர் தம்பிதுரை பேச்சு



கிருஷ்ணகிரி, ஆக.26

கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதியில் 14 லட்சம் மதிப்பில் இருவேறு பயணிகள் நிழல் கூடத்தினை ,மாநிலங்கள்அவை உறுப்பினர் தம்பிதுரை அவர்கள் பொதுமக்கள் பயன்பாட்டிற்கு திறந்து வைத்தார்.

மாநிலங்களவை உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் சட்டமன்ற தொகுதிக்கு உட்பட்ட சின்னமட்டாரபள்ளி ஊராட்சி இருளர் காலனி மற்றும் காரக்குப்பம் ஊராட்சி சின்ன காரகுப்பம் கிராமத்தில் பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று தல 7 லட்சம் என மொத்தம் 14 லட்சம் மதிப்பில் புதியதாக கட்டி முடிக்கப்பட்ட பயணிகள் நிழல் கூட்டத்தினை இன்று மாநிலங்களவை உறுப்பினர் முன்னாள் சபாநாயகர் திரு மு தம்பிதுரை அவர்கள் திறந்து வைத்து பயணிகள் பயன்பாட்டிற்கு அர்ப்பணித்தார்.,

இந்த நிகழ்ச்சியில் பேசிய தம்பிதுரை அவர்கள் ஆட்சியில் இருந்தாலும் இல்லாவிட்டாலும் பொதுமக்களுக்கு குறிப்பாக கிராமத்தில் உள்ள மக்களுக்கு தொன்றாட்டக்கூடிய ஒரே கட்சி அதிமுக தான் என தெரிவித்தார், மேலும் நான் பிறந்த ஊர் மற்றும் பிறந்த மாவட்டம் என்ற அடிப்படையில் இங்குள்ள வேப்பனப் பள்ளி பர்கூர் ஊத்தங்கரை தொகுதிகளில் விவசாய நிலங்கள் செழிப்படையும் வகையில் தென் பெண்ணை ஆற்றின் குறுக்கே வாணி ஒட்டு என்ற பகுதியில் தடுப்பணை கட்டுவது எனது வாழ்நாள் லட்சியம், இந்த திட்டம் கொண்டு வர ஏறத்தாழ 10,000 கோடி வரை செலவாகும், இந்தத் திட்டம் அமையப்பெற்றால் கிருஷ்ணகிரியில் உள்ள தென்பெண்ணை ஆற்று கரையோரம் உள்ள விவசாயிகள் பயன்பெறுவது போல் வேப்பனப்பள்ளி பர்கூர் ஊத்தங்கரை சட்ட மன்ற தொகுதிகளில் உள்ள பல்லாயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் ஆண்டுதோறும் நீர்ப்பாசன வசதி பெற்று பயன்பெறும் எனவே வாணி ஒட்டு தடுப்பணைதிட்டத்தினை என் வாழ்நாளில் எப்பேற்பட்டாவது பெற்று தருவேன் என அவர் உறுதியளித்தார்..

இந்த நிகழ்ச்சியில் பர்கூர் முன்னாள் அதிமுக சட்டமன்ற உறுப்பினர் சி வி ராஜேந்திரன், ஒன்றிய கழக செயலாளர் ஜெயபால், எம்ஜிஆர் மன்ற மாவட்ட இணை செயலாளர் ரவிச்சந்திரன், இலக்கிய அணி மாவட்ட செயலாளர் கார்த்திகேயன், அம்மா பேரவை மாவட்ட இணை செயலாளர் வெற்றிசெல்வம், அம்மா பேரவை ஒன்றிய செயலாளர் செந்தில், மற்றும் கட்சியில் முக்கிய நிர்வாகிகள் பொறுப்பாளர்கள் பொது மக்கள் பெண்கள் பலர் கலந்து கொண்டனர்.

# பள்ளி மாணவர்களுக்கான nexus 2025 அறிவியல் கண்காட்சி



கோவை, ஆக.26

கோவை மாவட்டம் கே பி ஆர் கலை அறிவியல் மற்றும் ஆராய்ச்சிக் கல்லூரியில் நுண்ணறிவு அமைப்பு மற்றும் தரவு அறிவியல் புலம் கணினி அறிவியல் மற்றும் தரவுப் பகுப்பாய்வுத்துறை சார்பாக பள்ளி மாணவர்களுக்கான nexus 2025 அறிவியல் கண்காட்சி நடைபெற்றது கல்லூரியின் முதல்வர் முனைவர் பி.கீதா பள்ளி மாணவர்களின் அறிவியல் திறனை வெளிக்கொணர்வதை முதன்மையான நோக்கமாகக் கருதி இந்நிகழ்வு நடத்தப்படுகிறது எனக்கூறி தலைமையுரை யாற்றினார்

இந்நிகழ்வின் சிறப்பு விருந்தினராக கூகுள் வளர்ச்சி நிபுணர் கமல் ஸ்ரீ சவுந்தர பாண்டியன் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினர். இதனைத் தொடர்ந்து மாணவர்கள் தயாரித்த அறிவியல் கண்டுபிடிப்புகளை சிறப்பு விருந்தினர்கள் மற்றும் துறை சார்ந்த நிபுணர்கள் பார்வையிட்டனர். பெங்களூரு டெலைட் நிறுவனத்தின் மனித வள மேம்பாட்டாளர் என்.கருணாகரன் சிறந்த அறிவியல் கண்டுபிடிப்பு களுக்கு பரிசுகளை வழங்கினார் இந்நிகழ்வில் 375 க்கும் மேற்பட்ட பள்ளி மாணவர் குழுக்கள் கலந்து கொண்டு தங்களது அறிவியல் படைப்புகளைக் காட்சிப்படுத்தினர். இதில் மாணவர்கள் பேராசிரியர்கள், துறைத்தலைவர்கள் கல்லூரி அலுவல்நிலைப் பணியாளர்கள் என ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டு பார்வையிட்டனர்.



மதுரை மாவட்ட ஆட்சியர் குறைதீர்க்கும் நாளில் 31 மாற்றுத்திறனாளிகளுக்கு மாற்றுத்திறனாளிக்கான காலிபர்களை மாவட்ட ஆட்சித்தலைவர் கே.ஜே. பிரவீன்குமார் வழங்கினார். மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் சாமிநாதன், தொழில் வழிகாட்டி அலுவலர் வெங்கடசுப்பிரமணியன் , அனைவருக்கும் கல்வி இயக்க ஒருங்கிணைப்பாளர் சூர்யகலா அவர்கள் ஆகியோர் உடன் உள்ளனர்.



நாமக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாற்றுத்திறனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.




வேலூர் மாவட்டம் , சத்துவாச்சாரியில் தேசிய முற்போக்கு திராவிட கழகத்தின் நிறுவனத் தலைவர் கேப்டன் விஜயகாந்த் பிறந்தநாளினை முன்னிட்டு அவரது திருவுருவ படத்திற்கு மலர் மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தி பொது மக்களுக்கு இனிப்புகள் வழங்கினர் இதில் அவைத் தலைவர் சுரேஷ் ,மாவட்ட நெசவாளர் அணி எஸ்.பி. தேவராஜ், ரவி ,செல்வம் ,மற்றும் தேமுதிக நிர்வாகிகள் ,பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

### வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ்

## புதிய கட்டடம் திறந்து வைக்கும் மற்றும் அரசு தொழிற்பயிற்சி நிலையம் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி



**இராமநாதபுரம் ,ஆக.26:** தமிழ்நாடு முதல மைச்சர் தலைமைச் செயலகத்திலிருந்து காணொளிக் காட்சிகளின் மூலம் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் புதிய கட்டடம் திறந்து வைக்கும் நிகழ்ச்சி மற்றும் புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையம் துவக்கி வைக்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு முதலமைச்சர் கடலாடியில் ரூ.750.95 இலட்சம் மதிப்பீட்டில் புதிதாக கட்டப்பட்ட தொழிற் பயிற்சி நிலைய கட்டடத்தை திறந்து வைத்தார்கள் இதனையொட்டி மாவட்ட ஆட்சித் தலைவர் சிம்ரன்ஜீத் சிங் காலோன், கடலாடி அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் உள்ள புதிய கட்டடத்தில் குத்துவிளக்கேற்றி வைத்து மாணவ, மாணவிகளுக்கு இனிப்பு வழங்கி உட்கட்டமைப்புகளை பார்வையிட்டார்.

இந்நிகழ்ச்சியில் உதவி இயக்குநர் சிவசுப்ரமணியம் பொதுப்பணித்துறை செயற்பொறியாளர் த.குருதிவேல் மாறன் உதவி செயற் பொறியாளர் ரவீந்திரன் கடலாடி தாசில்தார் பரமசிவம் கடலாடி. வட்டார வளர்ச்சி அலுவலர்கள் ஜெயஆனந்த், சங்கரபாண்டியன் கடலாடி ஒன்றிய திமுக செயலாளர் ஆறுமுக வேல். வனத்துறை அமைச்சர் ராஜ கண்ணப்பன் நேர்முக உதவியாளர்கள் கண்ணன், சத்தியேந்திரன், ரஞ்சித். பயிற்சி இணை இயக்குநர் அலுவலக கண்காணிப்பாளர் .கணேஷ் பாண்டியன் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.



சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா.பிருந்தாதேவி மாற்றுத்திறனாளிகளிடம் கோரிக்கை மனுக்களை பெற்றுக் கொண்டார்கள். உடன் உதவி ஆட்சியர் (பயிற்சி) விவேக்யாதவ், மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் பி.செண்பகவள்ளி ஆகியோர் உள்ளனர்.

# காரியாபட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சி திட்ட பணிகள்

### மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.என்.ஓ.சுகபுத்ரா, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு

**விருதுநகர்,ஆக.26:** விருதுநகர் மாவட்டம், காரியா பட்டி பேரூராட்சிக்கு உட்பட்ட பல்வேறு பகுதிகளில் நடைபெற்று வரும் வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்து மாவட்ட ஆட்சித் தலைவர் மரு.என்.ஓ. சுகபுத்ரா, நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு செய்தார். முன்னதாக, தமிழ்நாடு முதலமைச்சர் அவர்கள் நகர்புற பகுதிகளில் உள்ள அரசு உதவி பெறும் பள்ளிகளில் முதலமைச்சரின் காலை உணவுத் திட்டத்தினை 26.08.2025 அன்று விரிவாக்கம் செய்ய வுள்ளதை தொடர்ந்து, காரியாபட்டி பேரூராட்சி, கே. செவல் பட்டி ஊராட்சியில் அமைந்துள்ள அமலா துவக்கப்பள்ளியினை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு, அதற்கான முன்னேற்பாடு பணிகள் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

மேலும், தொடக்கப் பள்ளி மாணவர்களின் கற்றல், கற்பித்தல் திறன் குறித்து கேட்டறிந்து, மாணவர்களுடன் கலந்துரையாடினார்.

பின்னர், காரியாபட்டி பேரூராட்சியில் அம்ரூத் 2.0 திட்டத்தின் கீழ் ரூ.10.27 கோடி மதிப்பீட்டில் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி கட்டப்பட்டுள்ளதை நேரில் சென்று பார்வையிட்டு, மேல்நிலை நீர்தேக்க தொட்டிகளில் இருந்து ஏற்கனவே பயன்பாட்டில் உள்ள மற்றும் புதியதாக அமைக்கப்படவுள்ள பகிர்மான குழாய்கள் மூலம் பயனாளிகளுக்கு குடிநீர் வழங்கப்படவுள்ளதையும் மாவட்ட ஆட்சித்தலைவர் குறித்து ஆய்வு மேற்கொண்டார்.

பின்னர், காரியாபட்டி பேரூராட்சியில் 15வது நிதிக்குழு மானிய திட்டத்தின் கீழ் வார்டு எண்.10ல் உள்ள அரசு பணியாளர் குடியிருப்பு முதல் தெருவில் ரூ.6 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கப்பட்டுள்ளதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற் கொண்டார்.

அதனை தொடர்ந்து, கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டத்தின் கீழ் வார்டு எண்.7 பாண்டியன் நகர் 1,2,3,4 மற்றும் 5 வது தெருக்களில் ரூ.44 இலட்சம் மதிப்பீட்டில் பேவர் பிளாக் சாலை அமைக்கும் பணிகள் நடைபெற்று வருவதை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களால் நேரில் சென்று பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார்.

மேலும் நடைபெற்று வரும் பணிகளை விரைவாகவும், தரமானதாகவும் முடித்து பொதுமக்களின் பயன்பாட்டிற்கு கொண்டு வர சம்மந்தப்பட்ட அரசு அலுவலர்களை அறிவுறுத்தினார். இந்த ஆய்வின் போது,காரியாபட்டி பேரூராட்சி தலைவர் ஆர்.கே.செந்தில், செயற்பொறியாளர், பேரூராட்சி உறுப்பினர்கள் மற்றும் அரசு அலுவலர்கள் உட்பட பலர் உடன் இருந்தனர்.

# உதயேந்திரம் பேரூராட்சியில் தேர்தல் பணிக்குழு மற்றும் BDA ஆலோசனை கூட்டம்



**திருப்பத்தூர்,ஆக.26:** திருப்பத்தூர் மாவட்டம் வாணியம் பாடி தாலுக்கா உதயேந்திரம் பேரூர் திமுக சார்பில் உதயேந்திரம் பகுதியில் நடைபெற்ற தேர்தல் பணிக்குழு மற்றும் பிஞிகி ஆலோசனை கூட்டம் உதயேந்திரம் பேரூர் செயலாளர் ஆ.செல்வராஜ் தலைமையில் நடைபெற்றது. திருப்பத்தூர் மாவட்ட செயலாளரும் ஜோலார் பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி ஓரணியில் தமிழ்நாடு உறுப்பினர் சேர்க்கை குறித்தும், கழக ஆக்கப் பணிகள் குறித்தும் பல் வேறு ஆலோசனைகளை வழங்கினார். இக்கூட்டத்தில் வாணியம்பாடி சட்டமன்ற தொகுதி தேர்தல் பார்வையாளர் எம். நூருல்லா மாவட்ட சுற்றுச்சூழல் அணி அமைப்பாளர் எம். சிங்காரவேலன் OTN தொகுதி ஒருங்கிணைப் பாளர் குணசேகரன், பேரூர் நிர்வாகிகள் குமார், அம்பலவாணன், மீர் முகமதுகனி, ஜோசப்தாஸ், சசிகுமார், உமாபழனி, அசோகன் மற்றும் BDA, கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டார்கள்.

### தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில்

# இல்வச மகளிர் நல மருத்துவ முகாம்




**திருப்பூர்,ஆக.26:** தீரன் சின்னமலை மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரி திருப்பூர் மேற்கு ரோட்டரி சங்கம் திருப்பூர் வஞ்சிபாளையம் ரோட்டரி சங்கம் மற்றும் திருப்பூர் மேற்கு ரோட்டரி மக்கள் மருத்துவமனை சார்பில் இலவச மகளிர் நல மருத்துவ முகாம் வஞ்சி பாளையத்தில் உள்ள தீரன் சின்னமலை மகளிர் கலை அறிவியல் கல்லூரி வளாகத்தில் நடந்தது. மருத்துவ முகாமிற்கு கல்லூரியின் தலைமை நிர்வாக அதிகாரி முனைவர் ரேச்சல் நான்சி ஃபிலிப் தலைமை தாங்கினார். கல்லூரி முதல்வர் முனைவர் மோகன சவுந்தரி வரவேற்றார். சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட கொங்கு வேளாளர் அறக்கட்டளையின் துணைத் தலைவர் பி வி எஸ் பி. முருகசாமி மருத்துவ முகாமை தொடக்கி வைத்தார். முகாமில் 800 க்கும் மேற்பட்ட கல்லூரி மாணவிகள், பேராசிரியர்கள் மற்றும் ஊழியர்கள் ஆகியோருக்கு பொது மருத்துவம், கண், பல், குழந்தைகள் மற்றும் பெண்கள் நலம் மற்றும் சர்க்கரை நோய்க்கான பரிசோதனை மற்றும் சிகிச்சை அளிக்கப் பட்டது. மேலும் மருத்துவர்கள் ஆலோசனைப்படி மருந்துகளும் வழங்கப்பட்டது. முகாமில் ரோட்டரி மாவட்ட ஒருங்கிணைப் பாளர் வக்கீல் லோகநாதன், மண்டல ஒருங்கிணைப்பாளர் குமார செந்தில் ராஜா, ரோட்டரி உதவி ஆளுநரும், திருப்பூர் மேற்கு ரோட்டரி மக்கள் மருத்துவமனை தலைவருமான சண்முக சுந்தரம், திருப்பூர் மேற்கு ரோட்டரி தலைவர் ஆறுமுகன், செயலாளர் சிவக்குமார், பொருளாளர் செந்தில் பிரபு, திருப்பூர் வஞ்சிபாளையம் ரோட்டரி சங்கத் தலைவர் சதாசிவம், செயலாளர் பரத்ராஜ், பொருளாளர் ரேகா மகேஷ்குமார் உள்பட ரோட்டரி நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்.

# விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் சார்பாக கலெக்டரிடம் மனு



**காஞ்சிபுரம்,ஆக.26:** காஞ்சிபுரம் மாவட் டம் வாலாஜாபாத் வட்டம், புத்தகரம் கிராமத்தில் முத்து கொளக்கியம்மன் கோவில் தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத்துறையின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது. ஆயிரம் ஆண்டுகள் பழமை வாய்ந்த இக்கோவிலின் தேர் பழுதாகி பல ஆண்டுகளாக தேரோட்டம் இன்றி ஆடித் திருவிழா நடைபெற்று வந்தது. தற்போது முத்து கொளக்கியம்மன் கோவிலுக்கு தமிழ்நாடு அரசின் சார்பில் புதிய தேர் செய்வதற்கு ரூ. 28.40 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு தேர்த் திருப்பணி முடிந்தநிலையில் வருகிற 05/09/2025 வெள்ளிக்கிழமை அன்று மணியளவில் தமிழ்நாடு அமைச்சர்கள் முன்னிலையில் தேர் வெள்ளோட்டம் நடைபெறவுள்ளதாக துண்டறிக்கைகள் அச்சிடப்பட்டு வழங்கப்பட்டுள்ளன. இந்நிலையில் சாதி இந்துக்கள் தரப்பில் இந்தப் புதிய தேர் தலித்மக்கள் வசித்து வருகின்ற ஆதிதிராவிடர் குடியிருப்பு வீதிகளில் உலா வராது என்று சொல்லப்படுகிறது. தலித்மக்கள் தரப்பில் ஆதிதிராவிடர் வசிப்பிட வீதிகளில் திருத்தேர் உலா வரவேண்டும் என்று வேண்டுகோள் வைக்கின்றனர். தமிழ்நாடு அரசின் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப் பாட்டில் இயங்கும் கோவிலில் அனைத்து தரப்பு மக்களுக்கும் சம உரிமை உண்டு என்று மாண்பமை சென்னை உயர் நீதிமன்றம் பல்வேறு தீர்ப்புகளில் உறுதிப்படுத்தியுள்ளது. பட்டியல் மக்கள் வசிக்கும் வீதிகளில் தேர் உலா வருவதை ஒருசிலர் திட்டமிட்டு தடுக்கின்றனர். இது தீண்டாமைக் குற்றம் ஆகும்.

இதுசம்பந்தமாக விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் திவ. எழிலரசு தலைமையில் கட்சியின் முன்னாள் மாவட்டச் செயலாளர் புத்தகரம் கிராமத்தைச் சேர்ந்த பாசறை செல்வராஜ் ஆகியோர் காஞ்சிபுரம் மாவட்ட ஆட்சித் தலைவர் கலைச்செல்வி மோகன் அவர்களிடம் மனு அளித்தார். புத்தகரம் முத்துக் கொளக்கியம்மன் கோவில் திருத்தேர் பட்டியலின மக்கள் வசிப்பிட வீதிகளுக்கும் உலா வருவதற்கான நடவடிக்கைகளை மாவட்ட நிர்வாகம் முன்னெடுத்திட வேண்டும். தவறும்பட்சத்தில் புத்தகரம் ஆதி திராவிடர் மக்களுடன் முத்துக் கொளக்கியம்மன் கோவில் வாசலில் உண்ணாநிலை போராட்டத்தில் ஈடுபடுவதெனவும் முடிவுசெய்யப் பட்டது.

இந்நிகழ்வில் காஞ்சிபுரம் மாநகர் மாவட்டச் செயலாளர் வழக்குரைஞர் மதி.ஆதவன், மாவட்ட துணைச் செயலாளர் திருமாதாசன், ஒன்றிய செயலாளர் ஜார்ஜ்வளவன், நகரச் செயலாளர் வழக்கறிஞர் அசோக்குமார், காஞ்சிபுரம் மாநகர பொருளாளர் வினோத்குமார், சத்யா, ஆட்டோ பாட்சா, அகரம் முரளி, சிறுத்தை பாபு, ஊத்துக்காடு தாசன், ஏழுமலை, ஜெய்சங்கர், ரமேஷ் உள்ளிட்ட நிர்வாகிகள் பலரும் பங்கேற்றனர்.




தமிழ்நாடு முதலமைச்சர் தலைமைச் செயலகத்திலிருந்து, காணொளிக் காட்சி வாயிலாக நாமக்கல் மாவட்டம், திருச்செங்கோடு வட்டம், மல்லசமுத்திரம், சூரியகவுண்டம்பாளையம், பாரத் கல்வி அறக்கட்டளை கட்டிட வளாகத்தில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையின் சார்பில் புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையத்தினை திறந்து வைத்ததையொட்டி, ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன் தொழிற்பயிற்சி நிலையத்தினை பார்வையிட்டு, மாணவ, மாணவியர்களுடன் கலந்துரையாடினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, நாமக்கல் பாராளுமன்ற உறுப்பினர் வி.எஸ்.மாதேஸ்வரன், திருச்செங்கோடு சட்டமன்ற உறுப்பினர் ஈ.ஆர்.ஈஸ்வரன், முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.எஸ்.மூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.



திருப்பத்தூர் மாவட்டம் வாணியம்பாடி தாலுக்கா நாட்றம்பள்ளி ஒன்றியம் அம்பலூர் ஊராட்சி மன்ற அலுவலகம் அருகில் MGNREGS திட்டத்தின் மூலம் ரூ 5,27,000 மதிப்பீட்டில் புதிய பேவர் பிளாக் அமைக்கும் பணியை ஊராட்சி மன்ற தலைவர் ஏ.பி.முருகேசன் பூஜை செய்து பணியை துவக்கி வைத்தார்கள். உடன் ஊராட்சி மன்ற துணைத் தலைவர் நர்மதா நந்தகோபால் மற்றும் வார்டு உறுப்பினர்கள், ஊராட்சி செயலாளர் பொதுமக்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.




செங்கல்பட்டு மாவட்ட ஆட்சியர் அலுவலக குறைதீர் கூட்டரங்கில் மக்கள் நலன் காக்கும் நாள் கூட்டத்தில் செங்கல்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த 88 இருளர் மற்றும் பழங்குடியினருக்கு சாதி சான்றிதழ்களை மாவட்ட ஆட்சித்தலைவர் சினேகா அவர்கள் வழங்கினார்கள் உடன் செங்கல்பட்டு ஆட்சியர் மாலதி ஹெலன் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது)காஜா சாகுல்அமீது மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (நிலம்) நரேந்திரன் உதவி ஆணையர்(கலால்) ராஜன்பாபு மாவட்ட பிற்படுத்தப்பட்ட நல அலுவலர் வேலாயுதம் மாவட்ட வழங்கல் அலுவலர் வெங்கடாசலம் மற்றும் அரசு அலுவலர்கள் பொதுமக்கள் என ஏராளமானோர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாவட்டம்,ஸ்ரீ நாராயணி கல்வி குழுமத்தின் பட்டமளிப்பு விழா வேலூர் ஸ்ரீ புரம், ஸ்ரீ நாராயணி மஹாலில் நடைபெற்றது இதில் சிறப்பு விருந்தினர்கள் குத்துவிளக்கேற்றி வைத்து விழாவை தொடங்கி வைத்தனர். ஸ்ரீ நாராயணி கல்வி குழுமத்தின் நிர்வாக முதல்வர் டாக்டர் மாதவி, வரவேற்புரையாற்றினார். ஸ்ரீ நாராயணி கல்வி குழுமத்தின் இயக்குனர், மற்றும் பேராசிரியர் பாலாஜி துவக்கவுரையாற்றினார். ஸ்ரீ நாராயணி செவிலியர் கல்லூரியின் முதல்வர் டாக்டர் பிரபா சிறப்பு விருந்தினர்கள் பற்றிய அறிமுக உரையாற்றினார்கள்.சிறப்பு விருந்தினர்கள். தென்னிந்திய நடிகை அம்பிகா மற்றும் வேலூர் மாநகராட்சி மேயர் சுஜாதா ஆனந்த்குமார், ஆகியோர் விழாவில் கலந்துகொண்டு பட்டம் பெற்ற மாணவ மாணவிகளை பாராட்டி சிறப்புரையாற்றினார்கள். உடன் ஆசிரியர்கள் மாணவர்கள் பெற்றோர்கள் பலர் கலந்து கொண்டனர்.



ஈரோடு மாவட்ட ஆட்சித் தலைவர் ச.கந்தசாமி ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் தொழிலாளர் நலத்துறையின் சார்பில் கட்டுமானத் தொழிலாளர் நல வாரியத்தில் பதிவு பெற்ற தொழிலாளர்களின் குழந்தைகள் மருத்துவம் எம்.பி.பி.எஸ் படிக்க கல்வி நிதியுதவியாக ரூ.50,000/ஆயிரத்திற்கான ஆணையினை வழங்கினார். உடன் மாவட்ட வருவாய் அலுவலர் சு சாந்தகுமார் உட்பட பலர் உள்ளனர்.

**செங்கல்பட்டு திருக்கழுக்குன்றம்**
**தேசிய நெடுஞ்சாலை மேம்பால இறக்கத்தில்**

## வேகத்தடை உயர் மின் கோபுர விளக்கு அமைக்க பொதுமக்கள் கோரிக்கை




**செங்கல்பட்டு,ஆக.26:** செங்கல்பட்டு நகரத்திலிருந்து திருக்கழுக்குன்றம், கல்பாக்கம், மாமல்லபுரம், உள்ளிட்ட பகுதிகளுக்கு செங்கல்பட்டு தேசிய நெடுஞ்சாலை ராட்டின கிணறு பகுதியில் உள்ள மேம்பாலத்தின் வழியாக ஆயிரக்கணக்கான வாகனங்கள் செல்கின்றன.

அப்பகுதியில் பல ஆயிரத்துக்கும் மேற்பட்ட மக்கள் வசித்து வருகின்றனர் அவர்கள் தினமும் பணிக்காகவும், பள்ளிகளுக்கும் இரண்டு மற்றும் மூன்று சக்கர வாகனங்களில் பயணம் செய்து வருகின்றனர் மேம்பாலத்தில் கனரக வாகனங்கள் வேகமாக செல்வதால் விபத்துக்கள் அதிகமாக ஏற்படுவதாக உடல் சேதம் உயிர் சேதம் அதிகமாக நடப்பதால் அப்பகுதி மக்கள் கனரக வாகனம் செல்வதற்காக வேகத்தடை அமைக்க கோரியும் இரவு நேரங்களில் மேம்பாலத்தின் இருள் சூழ்ந்து காணப்படுவதால் உயர் மின்விளக்கு அமைக்க மற்றும் போக்குவரத்து போலீசார் பணிய அமர்த்தி போக்குவரத்தை சீர் செய்ய வேண்டும் என அப்பகுதி மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## திருச்சி மாநகர் மாவட்ட காங்கிரஸ் பொதுக்குழு கூட்டம்



**திருச்சி, ஆக.26:** திருச்சி மாநகர் மாவட்ட காங்கிரஸ் பொதுக்குழு கூட்டம் கடந்த 6ம் தேதி நடைபெற்றது. அதில் திருச்சி கிழக்கு, திருச்சி மேற்கு ,ஸ்ரீரங்கம், திருவெறும்பூர் சட்டமன்றவீ தொகுதிக்குட்பட்ட மாநகராட்சி வார்டுகள் 65 உள்ளடக்கிய 763 வாக்குச்சாவடிகளுக்கும் பூத் கமிட்டி குழு அமைப்பது என முடிவு செய்யப்பட்டது அதன்படி வார்டுகள் தோறும் கோட்ட தலைவர்கள் ஒத்துழைப்போடு பொறுப்பாளர்கள் நியமிக்கப்பட்டனர். அதன்படி ஒன்று முதல் 65 வார்டுகளிலும் அந்தந்த வார்டு தலைவர்கள் மற்றும் பொறுப்பாளர்களாக காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் , ஜெயந்தி தியாகராஜன், பொதுச் செயலாளர் பொன் தமிழரசன் , கோட்ட தலைவர்ஜெயம் கோபி, செயற்குழு கதிரேசன், பொதுச் செயலாளர் விக்னேஷ், செயற்குழு ஜெனிபர், கோட்டத் தலைவர் தர்மேஷ், இளைஞர் காங்கிரஸ் தேசிய பொதுச் செயலாளர் விச்சுலெனின் பிரசாத், துணைத் தலைவர் சக்கரபாணி, உறையூர் கோட்டத் தலைவர் பாக்கியராஜ், மாநில செய்தி தொடர்பாளர் திருச்சி வேலுச்சாமி, சிறுபான்மை பிரிவு பஜார் மைதீன், கோட்டத் தலைவர் வெங்கடேஷ் ,பொருளாளர் முரளி ,செயற்குழு உறுப்பினர் செந்தமிழ்மனித உரிமை துறை எஸ் ஆர் ஆறுமுகம், மகிளா காங்கிரஸ் அஞ்சு ,இலக்கிய அணி பத்மநாபன் , பொது செயலாளர் ராஜா, செயற்குழு கண்ணன், கோட்டத் தலைவர் பகதூர்ஷா ,ராகவேந்திரா, இளைஞர் காங்கிரஸ் மூர்த்தி, தேசிய செயலாளர் கிரிஸ்டோபர் திலக், மாவட்ட துணை தலைவர் பாஸ்கர், கோட்ட தலைவர் மலர் வெங்கடேஷ், இலக்கிய அணி ஜெயப்பிரியா, ஆகிய 65 பேர் நியமிக்கப்பட்டுள்ளனர். இந்தப் புதிய பொறுப்பாளர்கள் பட்டியலை மாவட்ட தலைவர் ரெக்ஸ் திருச்சி அருணாச்சலம் மன்றத்தில் உள்ள மாநகர் மாவட்ட காங்கிரஸ் கமிட்டி அலுவலகத்தில் வெளியிட்டார்.

## ஈரோடு வடக்கு மாவட்ட திமுக டி.என்.பாளையம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் அறிமுகம் மற்றும் செயல் வீரர்கள் ஆலோசனைக் கூட்டம்



**ஈரோடு, ஆக.26:** ஈரோடு வடக்கு மாவட்டம் கோபிசெட்டிபாளையம் சட்டமன்றத்தொகுதி டி.என்.பாளையம் தெற்கு ஒன்றிய பொறுப்பாளர் அறிமுக கூட்டம் மற்றும் செயல்வீரர்கள் ஆலோசனைக் கூட்டம் நால்ரோடு ஸ்ரீனிவாசா மண்டபத்தில் ஒன்றிய அவைத்தலைவர் டி.கே.கருப்புசாமி தலைமை யில் நடைபெற்றது.

நிகழ்ச்சியில் டி.என் பாளையம் தெற்கு ஒன்றியகழக பொறுப்பாளர் ஜம்பு (எ) கே.கே சண்முகம் வரவேற்புரையாற்றினார். ஈரோடு வடக்கு மாவட்ட கழக செயலாளர் என்.நல்லசிவம், மாவட்ட அவைத் தலைவர் பெருமாள்சாமி முன்னாள் சட்டமன்ற , முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் கே.ஆர் கந்தசாமி, மாவட்ட தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.வி. குமணன் ஆகியோர் சிறப்புரையாற்றினார்கள். இதில் காசிபாளையம் பேரூர் கழகச் செயலாளர் எம். எம் .பழனிச்சாமி பெரியகொடிவேரி பேரூர் கழகச் செயலாளர் ஆறுமுகம் , வாணிபுத்தூர் பேரூர் கழகச் செயலாளர் சேகர் (எ) பழனிச்சாமி, பெரியகொடிவேரி பேரூராட்சி தலைவர் தமிழ்மகன் சிவா , காசிபாளையம் பேரூராட்சி தலைவர் தமிழ்ச்செல்வி வெற்றிவேல், வாணிபுத்தூர் பேரூராட்சி தலைவர் சிவராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது இக்கூட்டத்தில் மாநில ,மாவட்ட ஒன்றிய, பேரூர் கழக நிர்வாகிகள், சார்பு அணி நிர்வாகிகள், கழகத் தொண்டர்கள், மற்றும் பிஎல்சி,பிஎல்ஏ 2, பிடிஏ , ஒருங்கிணைப்பாளர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்பித்தனர்கள். கூட்டத்தில் கலந்து கொண்ட அனைவருக்கும் டி.என் பாளையம் தெற்கு ஒன்றியகழக பொறுப்பாளர் ஜம்பு (எ) கே.கே சண்முகம் அசைவ விருந்து ஏற்பாடு செய்திருந்தார்.

**தேவகோட்டை மற்றும் சிவகங்கை பகுதியில் செயல்பட்டு வரும்**

## நாற்றங்கால் பண்ணையின் செயல்பாடுகள் மற்றும் மரக்கன்று வகைகள், பழ வகை மற்றும் காய்கறி நாற்றுக்கள் பராமரிப்பு பணிகள்

**மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி நேரில் பார்வையிட்டு ஆய்வு**



**சிவகங்கை,ஆக.26:** சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை மற்றும் சிவகங்கை ஊராட்சி ஒன்றிய பகுதிகளில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை, தோட்டக்கலை மற்றும் மலைப்பயிர்கள் துறையின் சார்பில் செயல்பட்டு வரும் நாற்றாங்கால் பண்ணைகளின் செயல் பாடுகள் மற்றும் மரக்கன்று வகைகள், பழ வகை மற்றும் காய்கறி நாற்றுக்கள் ஆகியவைகளின் பராமரிப்பு பணிகள் குறித்து, மாவட்ட ஆட்சித்தலைவர் கா.பொற்கொடி, நேரில் பார்வையிட்டு, ஆய்வு மேற்கொண்டு தெரிவிக்கையில்,

சிவகங்கை மாவட்டம் விவசாயத் தொழிலை பிரதானமாகக் கொண்டு இயங்கி வருகிறது. அந்த வகையில் விவசாயிகளுக்கு தோட்டக்கலைத்துறை அதிகளவு பங்களித்து வருகின்றன. விவசாயிகளின் விளைநிலங்கள் பகுதிகளில் தண்ணீர் இருப்பிற்கு ஏற்றவாறு பயிரிட்டு பயன்பெறும் வகையில், விவசாயிகளுக்கு மானியத்திட்டத்தில் சொட்டு நீர் உபகரணங்கள், வேளாண்மைப் பணிக்கான உபகரணங்கள், பண்ணைக்குட்டைகள் என பல்வேறு திட்டங்கள் வழங்கப்பட்டு வருவதுடன், காலச்சூழ்நிலைக்கு ஏற்றவாறு விவசாயிகளுக்கு தேவையான பல்வேறு வகையான பழவகை மரக்கன்றுகள் மற்றும் தொழில்நுட்பத்துடன் கூடிய அறிய வகையிலான உற்பத்தித்திறன் கொண்ட காய்கறி வகை நாற்றுக்கள் தோட்டக்கலைத்துறையின் மூலமாக விவசாயிகளுக்கு மானியத்திட்டத்தில் நேரடியாக வழங்கப்படுகிறது.

அந்தவகையில் தோட்டக்கலைத்துறையின் மூலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் அரசு பண்ணை அமைத்து அதன் மூலம் விவசாயிகளுக்கு பல்வேறு வகையான மரக்கன்றுகள் மற்றும் காய்கறி நாற்றுக்கள் தேவையான அளவு வழங்கப்பட்டு வருகிறது. மேலும், விவசாயிகளின் வேண்டுகோளுக்கிணங்க, சிவகங்கை பகுதியிலுள்ள மாவட்ட தோட்டக்கலைத்துறை தலைமை அலுவலக வளாகத்தில் 2 ½ ஏக்கர் தேர்வு செய்து, நாற்றங்கால் பண்ணை அமைத்து விவசாயிகளுக்கு மரக்கன்றுகள் மற்றும் காய்கறி நாற்றுக்கள் வழங்கும் வகையில், ரூர்பன் திட்டத்தின் மூலம் நாற்றங்கால் பண்ணை அமைக்கப்பட்டுள்ளது. இதில், தோட்டக்கலைத் துறையின் மூலம் பல்வேறு வகையான பழங்களைச் சேர்ந்த கன்றுகள் நடவு செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருகிறது. மேலும், காய்கறி செடிகளுக்கான நாற்றுக்கள் விவசாயிகளுக்கு குறைந்த விலையில் வழங்கிட திட்டமிடப்பட்டு, அதேபோல், பல்வேறு வகையிலான மரக்கன்றுகளும் இங்கிருந்து விவசாயிகளுக்கு குறைந்த விலையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

இங்கு அமைக்கப்பட்டுள்ள நாற்றங்கால் பண்ணையின் நோக்கம், அதிகளவு விவசாயப் பெருமக்கள் தலைநகர் பகுதிக்கு அதிகளவு பல்வேறு வேலைப்பணி காரணமாக வந்து செல்லும் போது அவற்றுடன் வேளாண்மைப் பணிக்காக தேவையான கன்றுகளை அரசுப்பண்ணையிலேயே குறைந்த கட்டணத்தில் எடுத்துச்செல்லும் வகையில் செயல்பட்டு வருகிறது. இப்பண்ணையின் செயல்பாடுகள் மற்றும் பராமரிக்கப்பட்டு வரும் மரக்கன்றுகளின் வகைகள் ஆகியன குறித்து, நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. இதே போன்று, தேவகோட்டை பகுதியில் கண்டதேவி ஊராட்சிக்குட்பட்ட கீழசெம்பொன்மாரி கிராமத்தில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறையின் சார்பில் மகாத்மா தேசிய ஊரக வேலை உறுதித்திட்டத்தின் கீழ் ரூபாய் 4.91 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடுதல் வட்டார நாற்றங்கால் பண்ணையின் செயல்பாடுகள் குறித்தும் ஆய்வு மேற்கொள்ளப்பட்டு, அங்கு 20 செண்ட் பரப்பளவில் பராமரிக்கப்பட்டு வரும் கொய்யா, பெருநெல்லி, பூவரசு, செம்மரம், மகாக்கனி மற்றும் ரோஸ்வுட் உள்ளிட்ட பல்வேறு வகையான 10,000 எண்ணிக்கையிலான மரக்கன்றுகளின் பராமரிப்பு பணிகள் குறித்தும், நேரில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. விவசாயிகளுக்கு பயனுள்ள வகையில், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் செயல்பட்டு வரும் நாற்றாங்கால் பண்ணையினை விவசாயிகள் நல்ல முறையில் பயன்படுத்திக் கொண்டு, பயன்பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி கா.பொற்கொடி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்தார். இந்நிகழ்ச்சியில், தோட்டக்கலைத்துறை உதவி இயக்குநர் தர்மர், தேவகோட்டை வட்டார வளர்ச்சி அலுவலர் திருமதி பழனியம்மாள் உள்ளிட்ட துறை சார்ந்த அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# மீஞ்சூரில் தேமுதிக நிறுவனர் விஜயகாந்த் பிறந்த தினத்தை முன்னிட்டு ஏழைகளுக்கு அன்னதானம்



**பொன்னேரி,ஆக.26:** திருவள்ளூர் மாவட்டம், மீஞ்சூரில் தேமுதிக நிறுவனர் மறைந்த புரட்சி கலைஞர் விஜயகாந்த் பிறந்த தினத்தை முன்னிட்டு மீஞ்சூர் ஒன்றிய, பேரூர் கழகங்களின் சார்பில் மாநில செயற்குழு உறுப்பினர் கணேஷ் குமார் ஏற்பாட்டில் மீஞ்சூர் நகர செயலாளர் எஸ்.ஜெ.பிரகாஷ் முன்னிலையில் மீஞ்சூர் பஜாரில் கேப்டன் விஜயகாந்த் அவர்களின் திருவுருவ படம் காட்சிக்காக வைக்கப்பட்டு படத்திற்கு மலர் தூவி மலர் அஞ்சலி செலுத்தப்பட்டது. பின்னர் ஏழை எளியவருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது. திருவள்ளூர் கிழக்கு மாவட்ட செயலாளர் கே.எம்.டில்லி சிறப்பு அழைப்பாளராக கலந்து கொண்டு ஏழை எளியவருக்கு அன்னதானங்களை வழங்கினார். இதில் நகர நிர்வாகிகள் எஸ்.ஜெயபிரகாஷ்,நகரச் செயலாளர் வீரப்பன், நகரத் துணைச் செயலாளர் ராஜா,கிருஷ்ணா, லோகநாதன்,ஆட்டோ சுரேஷ், பாலாஜி அரியன்வாயல் ஷேக் மற்றும் தேமுதிக மாநில, மாவட்ட,ஒன்றிய,நகர மற்றும் பிற அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்

## கிருஷ்ணகிரியில் திமுக மாநில வர்த்தக அணி சார்பாக

# மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம்



**கிருஷ்ணகிரி,ஆக.26:** கிருஷ்ணகிரியில் திமுக மாநில வர்த்தக அணி சார்பாக மாநில, மாவட்ட நிர்வாகிகள் கலந்தாய்வு கூட்டம் நடைபெற்றது. இந்த கூட்டத்தில் தமிழ்நாடு முழுவதும் இருந்து 300க்கும் மேற்பட்ட மாநில, மாவட்ட வர்த்தகர் அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். கூட்டத்தில் மாநில வர்த்தக அணி செயலாளர் கவிஞர் காசி முத்துமாணிக்கம் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார். அப்போது பேசிய அவர்.. தமிழக அரசின் தாயுமானவர் திட்டம், நலம் காக்கும் ஸ்டாலின், உங்களுடன் ஸ்டாலின் போன்ற திட்டங்கள் வணிகர்கள் மற்றும் பொதுமக்களுக்கு மிகவும் பயனுள்ளதாக இருக்கிறது. இத்திட்டங்களை கொடுத்த தமிழக முதல்வருக்கு நன்றி தெரிவித்தார். கூட்டத்திற்கு பிறகு செய்தியாளர்களிடம் பேசிய காசி முத்துமாணிக்கம்..

சமீபத்தில் மதுரையில் நடந்த தவெக மாநாடு சினிமா சூட்டிங் எடுப்பது போல் நடந்தது. தவெக தலைவர் விஜய் மிகவும் தரம் தாழ்ந்து தமிழக முதல்வரை பேசியுள்ளார். இது கண்டனத்திற்குரியது என்றும், இதுவரை எந்த தேர்தலிலும் போட்டியிடாமல், கட்சியில் மூத்த நிர்வாகிகள் யாரும் இன்றி கட்சி ஆரம்பித்த உடனே முதலமைச்சராக வேண்டும் என பேசி வருகிறார். மக்கள் பணி செய்யாமல் கட்சியை ஆரம்பித்த உடனே முதலமைச்சர் ஆக வேண்டும் என்று கனவு காணும் விஜய்க்கு வருகின்ற தேர்தலில் மக்கள் மரண அடி கொடுப்பார்கள். அதன் பிறகு நாட்டில் எந்த நடிகரும் முதல்வர் கனவுடன் அரசியலுக்கு வர மாட்டார்கள் என தெரிவித்தார்.

பாரத பிரதமர் மோடி வருகின்ற தீபாவளி அன்று சிறு குறு வியாபாரிகள் பயன்பெறும் வகையில் ஜிஎஸ்டியில் புதிய அறிவிப்புகள் வெளியாகும் என சமீபத்தில் தெரிவித்து இருந்தார். அதற்கு பதில் அளித்த அவர்.. ஜி எஸ் டி முழுவதுமாக நீக்கும் நாள் தான் வியாரிகளுக்கும், பொது மக்களுக்கும் மகிழ்ச்சி என்றார்.




தமிழ்நாடு முதலமைச்சர் சென்னை தலைமைச் செயலகத்திலிருந்து, தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறை (வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை) சார்பாக, கிருஷ்ணகிரி மாவட்டம், அவதானப்பட்டி அருகில் உள்ள தனியார் கட்டிடத்தில் புதிய அரசு தொழில் பயிற்சி நிலையத்தை துவக்கி வைத்தார். அதனைத்தொடர்ந்து, கிருஷ்ணகிரி மாவட்டம், அவதானப்பட்டி அருகில் உள்ள தனியார் கட்டிடத்தில் துவக்கி வைக்கப்பட்டுள்ள புதிய அரசு தொழில் பயிற்சி நிலையத்தில், கலெக்டர் தினேஷ் குமார் குத்துவிளக்கு ஏற்றி வைத்து, 35 மாணவ, மாணவிகளுக்கு சேர்க்கைக்கான ஆணைகளை வழங்கினார். உடன், மாவட்ட திறன் பயிற்சி உதவி இயக்குநர் சி.பன்னீர் செல்வம், தொழிலாளர் நல உதவி ஆணையர் மாதேஷ்வரன், ஐடிஐ கல்லூரி முதல்வர் (பொ) சாமுவேல் அய்யாதுரை உள்ளிட்ட பலர் உள்ளனர்.



காஞ்சிபுரம் எம்எம்.அவன்யூ உள்ளே ஸ்ரீ ஸ்ரீனி மெடிக்கல் ஃபவுண்டேஷன் அருகில் பாரதிய ஜனதா அமைப்புசாரா தொழிலாளர் சங்கம் தமிழ்நாடு சார்பில் தமிழ்நாடு பாஜக மாநில தலைவர் நைனார் நாகேந்திரன் அறிவுத்தலையின்படி காஞ்சிபுரம் மாவட்ட தலைவர் ஜெகதீசன் வாழ்த்துரையின்படி அமைப்புசாரா தொழிலாளர் சங்க திருவண்ணாமலை மாவட்ட தலைவர் எஸ்ஆர்.மணிகண்டன் முன்னிலையில் மாநில துணைத்தலைவர் டாக்டர் டி. கணேஷ் ஆட்டோ ஓட்டுனர் சங்கத்தினை ரிப்பன் வெட்டி துவக்கி வைத்தார். நிகழ்ச்சியில் விஜயேந்திரர் ஆட்டோ ஓட்டுனர் சங்க தலைவர் குணா கே.சடையப்பன் , செயலாளர் ஜி எஸ் டில்லிபாபு, பொருளாளர் டி சீனிவாசன், துணைத் தலைவர் சிவராம், துணை செயலாளர் சந்துரு உள்ளிட்ட ஆட்டோ சங்க நிர்வாகிகள் பாஜக நிர்வாகிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். மேலும் வந்திருந்த பொது மக்களுக்கு அன்னதானமாக தயிர் சாதம் வழங்கினார்கள்.

## அவலூர்பேட்டையில்

# சித்தகிரி முருகர் கோவில் குகையில் ஒருவர் சிக்கி உயிரிழப்பு



**விழுப்புரம்,ஆக.26:** விழுப்புரம் மாவட்டம் அவலூர் பேட்டையில் உள்ள சித்தகிரி முருகன் கோவில் உள்ளது. இந்நிலையில் அவலூர்பேட்டை பகுதியை சேர்ந்த குமரேசன் என்பவர் மது போதையில் இருந்ததாக கூறப்படுகிறது.இந்த நிலையில் மனைவி ஜெயக்குமாரிடம் மது போதையில் குமரேசன் சண்டையிட்டு தகராறு ஏற்பட்டால் அவ்விடத்தில் சென்று இருப்பது வழக்கம். கடந்த இரண்டு தினங்களுக்கு முன்பு மனைவி ஜெயக்குமாரிடம் நடைபெற்ற சண்டையால் கோபமடைந்த வெளியில் சென்றதாக தெரிகிறது. இந்நிலையில் சித்தகிரி முருகர் கோவில் பின்புறம் உள்ள குகையில் குமரேசன் இறந்து கிடப்பதாக அவலூர்பேட்டை போலீசாருக்கு தகவல் கிடைத்தது. இதன அடிப்படையில் அவலூர்பேட்டை போலீசார் நேரடியாக சென்று குமரேசனின் உடலை கைப்பற்ற முயற்சி மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இருப்பினும் தற்போது வரை குமரேசன் மலை குகையில் சிக்கிக் கொண்டுள்ளதால் அந்த சடலத்தை அப்புறப்படுத்தும் பணி தாமதம் ஆகி வருகிறது. மேலும் அவரது மனைவி ஜெயக்குமாரியிடம் போலீசார் தீவிர விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். மேலும் அவலூர் பேட்டை சித்தகிரி முருகன் கோவில் பின்புறம் உள்ள கோவில் குமரேசன் சிக்கி உள்ள சம்பவம் அப்பகுதியில் அதிர்ச் செய்யும் பரபரப்பையும் ஏற்படுத்தி உள்ளது மேலும் குமரேசன் மனநலம் பாதிக்கப் பட்டவர் என்பது தற்போதைய தகவல் வெளியாகியுள்ளது.

## ஆண்டிபட்டி பேரூராட்சி தி.மு.க., தலைவர் மீது

# திமுக கவுன்சிலர்கள் மற்றும் கூட்டணி கவுன்சிலர்கள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வி



**தேனி,ஆக.26:** ஆண்டிபட்டி பேரூராட்சி தி.மு.க, தலைவர் சந்திரகலா மீது திமுக மற்றும் கூட்டணி கவுன்சிலர்கள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியில் முடிந்தது. ஆண்டிபட்டி பேரூராட்சியில் உள்ள 18 வார்டுகளில் தி.மு.க., சார்பில் 8, அ.தி.மு.க., சார்பில் 6, இந்திய கம்யூ., 1, மார்க்சிஸ்ட் கம்யூ. 1, வி.சி.க; 1 உள்ளனர். 11 வது வார்டு கவுன்சிலர் ராமசாமி இறந்து விட்டார்.

தி.மு.க., வைச் சேர்ந்த சந்திரகலா பேரூராட்சி தலைவராக உள்ளார். அவர் மீதான அதிருப்தியால் கவுன்சிலர்கள் தலைவரின் மீது நம்பிக்கை இல்லா தீர்மானம் கொண்டு வந்தனர். தீர்மானத்தின் மீது வாக்கெடுப்பு நடத்தி பதிவு செய்ய உயர் நீதிமன்றம் மதுரை கிளை உத்தரவிட்டது. இதனை தொடர்ந்து காலை 10:30 மணிக்கு பேரூராட்சி செயல் அலுவலர் முருகன் தலைமையில் கூட்டத்திற்கான ஏற்பாடு செய்யப்பட்டது.

கவுன்சிலர்கள் ரகசியமாக வாக்களிப்பதற்கான ஏற்பாடுகளும் செய்யப்பட்டன. கவுன்சிலர்கள் யாரும் கூட்டத்தில் பங்கேற்று ஓட்டளிக்கவில்லை. இதனை தொடர்ந்து தி.மு.க. தலைவர் மீதான நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியில் முடிந்ததாகவும் இன்னும் ஒரு ஆண்டுக்கு அவர் மீது நம்பிக்கையில்லா தீர்மானம் கொண்டு வருவதற்கு வாய்ப்பு இல்லை என்றும் அதிகாரிகள் தெரிவித்தனர். கவுன்சிலர்கள் கொண்டு வந்த நம்பிக்கையில்லா தீர்மானம் தோல்வியில் முடிந்ததால் தி.மு.க.,வைச் சேர்ந்த சந்திரகலா ஆண்டிபட்டி பேரூராட்சி தலைவராக தொடர்கிறார்.

## பள்ளிப்பட்டு ஒன்றியத்தில் ரூ.30 லட்சத்து 83 ஆயிரம் மதிப்பீட்டில்

# 2 புதிய அங்கன்வாடி மைய கட்டிடங்கள்

## எஸ்.சந்திரன் எம்.எல்.ஏ. திறந்து வைத்தார்





**திருத்தணி,ஆக.26:** பள்ளிப்பட்டு ஊராட்சி ஒன்றியம் கீழ்நெடுங்கல் மேல் நெடுங்கல் கிராமங்களில் புதியதாக கட்டப்பட்ட இரண்டு அங்கன்வாடி மைய கட்டிடங்களை திருத்தணி எம்.எல்.ஏ .எஸ். சந்திரன் ரிப்பன் வெட்டி திறந்து வைத்தார். கீழ்நெடுங்கல் கிராமத்தில் கனிமங்களும் மற்றும் குவாரிகள் நிதி (2024 –2025) திட்டத்தின் கீழ் ரூ. 15 லட்சத்து 50 ஆயிரம் மதிப்பீட்டிலும் மேல் நெடுங்கல் கிராமத்தில் பிரதம மந்திரி ஆதர்ஷ் கிராம் யோஜனா திட்டத்தின் கீழ் (2022 –2023) ரூ. 15 லட்சத்து 33,000 மதிப்பீட்டிலும் இரண்டு புதிய அங்கன்வாடி மைய கட்டிடங்களை திறந்து வைத்து பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கினார். நிகழ்ச்சியில் பள்ளிப்பட்டு தெற்கு திமுக ஒன்றிய செயலாளர் ஜி. ரவீந்தரா மற்றும் அதிகாரிகள் திமுக நிர்வாகிகள் முன்னாள் உள்ளாட்சி பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

## ஆதரவற்ற அனாதை பிணங்களை நல்லடக்கம் செய்யும்

# சமூக செயற்பாட்டாளருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருது



**திருச்சி,ஆக.26:** எபிக் ஆஃப் அச்சிவர்ஸ் அமைப்பு சார்பில் தமிழ்நாடு சாதனையாளர்கள் விருது 2025 நிகழ்ச்சி திருச்சிராப்பள்ளி மாநகராட்சி ரத்தினவேல் தேவர் வணிகவளாக கூட்ட அரங்கில் நடைபெற்றது. நிகழ்வில், மயான பூமியில் மனைவி மகளுடன் ஆதரவற்ற அனாதை பிரேதங்களை நல்லடக்க பணியை மேற்கொண்டு வரும் அமிர்தம் சமூக சேவை அறக்கட்டளை நிர்வாக அறங்காவலர் யோகா ஆசிரியர் விஜயகுமருக்கு வாழ்நாள் சாதனையாளர் விருதினை இந்திய திரைப்பட மற்றும் தொலைக்காட்சி நடிகை நளினி வாழ்நாள் சாதனையாளர் விருதினை எபிக் ஆஃப் அச்சிவர்ஸ் அமைப்பு தலைவர் தினகரன், தலைமை நிர்வாக அதிகாரி பால நாகம்மாள், மேலாளர் மீரா, பாடகர் பிரகாஷ் முன்னிலையில் வழங்கினார்.

## நாட்றம்பள்ளியில் பேருந்து வழித்தடங்களில்

# புதிய பேருந்துகள் துவக்கி வைத்த எம்எல்ஏ



**திருப்பத்தூர்,ஆக.26:** திருப்பத்தூர் மாவட்டம் நாட்றம்பள்ளி பேருந்து நிலையத்தில் திருப்பத்தூர் நாட்றம்பள்ளி ஆவாரங்குப்பம் மற்றும் குருபவாணிகுண்டா நாட்றம்பள்ளி திருப்பத்தூர் சந்திரபுரம் ஆகிய வழித்தடங்களில் இயங்கும் ஜி17 மற்றும் ஜி8 புதிய பேருந்துகள் இயக்கும் விழா நடைபெற்றது. சிறப்பு அழைப்பாளராக ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி புதிய பேருந்துகளை கொடி அசைத்து, பேருந்து இயக்கி வைத்து சிறப்பித்தார். உடன் நாட்றம்பள்ளி கிழக்கு ஒன்றிய செயலாளர் டி.சாமுடி, நாட்றம்பள்ளி பேரூர் செயலாளர் எஸ்.உமாசந்திரன், நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் தலைவர் வெண்மதி சிங்காரவேலன், நாட்றம்பள்ளி ஒன்றிய குழுத் து.தலைவர் டி.தேவராஜி, மாவட்ட தகவல் தொழில்நுட்ப அணி ஒருங்கிணைப்பாளர் மு.க.அருள்நிதி, மாவட்ட தொழிலாளர் அணி அமைப்பாளர் கா.தேவராஜ், மாவட்ட மகளிர் தொண்டரணி அமைப்பாளர் சி.மஞ்சுளா மற்றும் அரசு துறை அதிகாரிகள், கழக முன்னோடிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், பொதுமக்கள் கலந்து கொண்டார்கள்.

# ஆனந்தா கல்லூரி, தேவகோட்டை போதைப் பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கம்



தேவகோட்டை, ஆக.26

தேவகோட்டை ஆனந்தா கல்லூரியில் போதைப் பொருள் விழிப்புணர்வு கருத்தரங்கம் கல்லூரியின் செயலர் அருட்தந்தை முனைவர் செபாஸ்டியன், முதல்வர் அருட்தந்தை ஜார்ஜ் பெர்னாண்டஸ் ஆகியோர்கள் தலைமையில் நடை பெற்றது. இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராக தேவகோட்டை துணை நீதிபதி கலை நிலா அவர்கள் பேசுகையில், போதைப் பொருளின் தீமைகள் அதனால் வரக்கூடிய விளைவுகளை மாணாக்கர்களுக்கு எடுத்துரைத்தார். மேலும் எதிர்கால வாழ்விற்கு கல்வியின் முக்கியத்துவத்துவம் மற்றும் கல்வியால் வாழ்க்கையில் உயர்ந்தவர்கள் பற்றிகூறினார்.

கருத்தரங்கிற்கு தேவகோட்டை வழக்குரைஞர் ஹரி பிரசாத், ஞான சுபா தர்ஷினி, மணிமேகலை, காளி முத்து, ஆனந்தன் ஆகியோர்களும் கலந்து கொண்டு போதைப் பொருளால் இன்றைய இளைஞர்கள் படக்கூடிய துன்பங்களையும் விளைவுகளையும் அப்போதை பொருளிலிருந்து தங்களைத் தற்காத்துக் கொள்வதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைத்தார்.

இந்நிகழ்விற்கான ஏற்பாட்டினை நாட்டு நலப்பணித் திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் குமார், நான்சி, ராஜா ஷாஜகான் ஆகியோர்கள் செய்திருந்தனர்.

# துத்திப்பட்டு அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் கும்பாபிஷேக விழா



வேலூர், ஆக.26

வேலூர் மாவட்டம், துத்திப்பட்டு கிராமம் அ.கட்டுபடி கூட்ரோடு குமரன் நகரில் எழுந்தருளியுள்ள அருள்மிகு ஸ்ரீ செல்வ விநாயகர் ஆலயத்தில் நடைபெற்ற கும்பாபிஷேக விழாவில் யாகசாலை பூஜைகள், வேள்விகள் ,கோ பூஜை, லட்சுமி பூஜை, கடம் புறப்பாடு ,விமான கோபுரத்திற்கு கலச அபிஷேகமும், மகாதீபாராதனையும் ,பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் நிகழ்ச்சியும் வெகு விமரிசையாக நடைபெற்றது.

இதில் சிறப்பு அழைப்பாளர்கள் செங்காநத்தம் ஸ்ரீலஸ்ரீ பகவதி சித்தர், வேலூர் கோட்டை செயல் தலைவர் ராஜன் ஜி ,வேலூர் கோட்டை அமைப்புச் செயலாளர் வேணுகோபால் ஜி ,ஆற்காடு சட்ட மன்ற உறுப்பினர் ஈஸ்வரப்பன், துத்திப்பட்டு ஊராட்சி மன்ற தலைவர் ரவிச்சந்திரன், மற்றும் விழா குழுவினர்கள் ஊர் பொதுமக்கள், பக்தர்கள் பலர் திரளானோர் கலந்து கொண்டனர்.

### காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறையின் கீழ்

# முதுகலை உயிரி வேதியல் பாடப்பிரிவு துவக்க விழா



காரைக்குடி, ஆக.26

காரைக்குடி அழகப்பா பல்கலைக்கழக உயிரி தகவலியல் துறையின் கீழ் முதுகலை உயிரி வேதியல் பாடப்பிரிவு துவக்க விழா பல்கலைக்கழக அறிவியல் வளாக சர். சி.வி. ராமன் அரங்கில் நடைபெற்றது இவ்விழாவில் உயிரி தகவலியல் துறை தலைவர் மூத்த பேராசிரியர் ஜெ. ஜெயகாந்தன் வரவேற்புரையாற்றினார். அவர் தமது உரையில் தேசிய தர மதிப்பீட்டில் (NAAC) அதிக தரப்புள்ளிகளை பெற்று இரட்டை முறையில் அங்கீகாரம் பெற்ற முதல் பல்கலைக்கழகம் நமது பல்கலைக்கழகம் ஆகும். நவீன உள்கட்டமைப்பு ஆராய்ச்சி உபகரணங்களையும், திறன் மேம்பாட்டுடன் கூடிய தொழில் முனைவு போன்ற வளர்ச்சி திட்டங்களையும் நிதி மேலாண்மையையும், கழிவுநீர் சுத்திகரிப்பு, பசுமை வளாகத்தையும் திறன் பட உருவாக்கிய துணைவேந்தருக்கு நன்றி கூறினார் இப்பாடப்பிரிவின் ஒருங்கிணைப்பாளர் உதவி பேராசிரியர் பா. பூமிஇப்பாடத்திட்டத்தின் நோக்கம், வடிவமைப்பு மற்றும் முக்கியத்துவம் குறித்து விளக்கி பேசினார் அழகப்பா பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் க. ரவி கலந்து கொண்டு துவக்க உரையாற்றினார்.

அவர் தமது உரையில் உயிரி வேதியியல் பாடப்பிரிவு மிகச் சிறந்த பாடப்பிரிவு என்றும் மற்ற பாடப்பிரிவுகளுடன் இணைந்து செயல்படும் தன்மை கொண்டது. மேலும் இப்ப பல்கலைக்கழகத்தில் உள்ள அனைத்து ஆராய்ச்சி உபகரணங்களையும் துறை பாகுபாடின்றி அனைத்து மாணவர்களும் பயன்படுத்திக் கொள்ளலாம். உதாரணமாக நான் இயற்பியல் துறையில் பேராசிரியராக பணியாற்றிய பொழுது 2004 ஆம் ஆண்டு வாங்கிய உபகரணம் இன்று வரை அனைவராலும் பயன்படுத்தப்பட்டு வருகிறது. மாணவர்கள் இங்குள்ள வசதிகளை பயன்படுத்தியும் பேராசிரியர்களுடன் கலந்தாலும் சித்தும் தங்களை வளர்த்துக் கொள்ள வேண்டும் என்றார்.

மேலும் இத்துறையில் பயிலும் மாணவர்களுக்கு மருத்துவம், தடையவியல், மருந்து தயாரிப்பு தொழில்நுட்பம், பொது சுகாதாரம், விவசாயம் சுற்றுச்சூழல் அறிவியல் இன்னும் பல துறைகளில் வேலை வாய்ப்புகள் பெறும் நோக்கத்துடனும மேம்பட்ட ஆராய்ச்சிகளை மேற்கொள்ளும் வகையிலும் புதிய தொழில் துவங்கும் வகையிலும் இப்பாடை திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது ஒவ்வொரு கல்வி ஆண்டிலும் மாணவர்கள் புதுமை யுக்திகளை கையாண்டு வளர்ச்சி பாதையில் முன்னேற்றம் வகையில் புதிய பாடப்பிரிவுகள் துவங்கப்படுகின்றன.

புதிய முதுகலை பாடப்பிரிவுகளான கணினி தடயவியல், செயற்கை நுண்ணறிவு மற்றும் தரவு அறிவியல்,( artificial intelligence & data science) ஊட்டச்சத்து மற்றும் உணவு கட்டுப்பாடு ( nutrition & dietetics) தொடர்ந்து இக்கல்வி ஆண்டில் புதிதாக உயிரி வேதியியல் ( Polymer chemistry) துவங்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார் மேலும் அவர் குறிப்பிடுகையில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் 11897 ஆராய்ச்சி கட்டுரைகளை 155204 மேற்கோள்களுடன் உயர்தர ஆராய்ச்சி இதழ்களில் 131 எச் இன்டக்ஸ் (h index) ல் வெளியிட்டுள்ளார்கள் மேலும் இப்பொழுது பல்கலைக்கழகம் தேசிய தர நிர்ணய குழுவால் 3.59 புள்ளிகளுடன் A++ இரட்டை முறையில் அங்கீகாரம்,

தேசிய கல்வி நிறுவன தரவரிசையில் பல்கலைக்கழக அளவில் 47வது இடத்தையும், மாநில பொதுப் பல்கலைக்கழக தர வரிசையில் 17 வது இடத்தையும், கியூ. எஸ் தரவரிசையில் ஆசிய அளவில் 271– 280 வது இடமும், டைம்ஸ் உயர்கல்வி நிறுவனத்தால் வெளியிடப்படும் உலக பல்கலைக்கழக தர வரிசையில் 601– 800 வது பிரிவிலும், ஆசிய அளவில் 251– 300 வது இடமும் இளம் பல்கலைக்கலங்களுக்கான தர வரிசையில் 201– 250வது இடமும் பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது என்றார். அழகப்பா பல்கலைக்கழக பதிவாளர் முனைவர் செந்தில் ராஜன் தனது உரையில் உயிரி வேதியியல் பாடப்பிரிவுகளில் மாணவர்கள் அதிக அளவில் வெளியீடுகளையும் காப்புரிமைகளையும் உருவாக்க வேண்டும் என்றார்.

இதனைத் தொடர்ந்து ஆட்சி மன்ற குழு உறுப்பினர்களான மூத்த பேராசிரியர்கள் வெ. பழனிச்சாமி, சி. சேகர், சு. ராசாராம் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர் தேர்வாணையர் பேராசிரியர் ஜோதி பாசு உள்தர உறுதிப்பாட்டு பிரிவு இயக்குனர் பேராசிரியர் கா. அலமேலு பாடத்திட்ட வடிவமைப்பு மற்றும் வளர்ச்சி குழுவின் இயக்குனர் (பொ ) பேராசிரியர் வெ. சிவக்குமார் ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

இறுதியாக உயிரி தகவல்கள் துறையைச் சார்ந்த பேராசிரியர் சஞ்சீவ் குமார் சிங் நன்றி கூறினார்

## ...உலக செய்திகள்...

# "புதிய தொழில் தொடங்கும் திட்டத்தில் உள்ளேன்" மூளையில் சிப் பொருத்திக் கொண்ட முதல் நபர் பகிர்வு

வாஷிங்டன்: விரைவில் தொழில் தொடங்கும் திட்டத்தில் உள்ளதாக எலான் மஸ்க்கின் நியூராலிங்க் நிறுவன சிப்பினை தனது மூளையில் பொருத்திக் கொண்ட முதல் நபரான நோலண்ட் அர்பாக் கூறியுள்ளார்.

கடந்த 18 மாதங்களுக்கு முன்பு மூளையில் அறுவை சிகிச்சை செய்து கொண்ட அவர், நியூராலிங்க் சிப் உதவியுடன் தனது அன்றாட வாழ்க்கை அனுபவத்தை பகிர்ந்துள்ளார். உடல் அசைவில்லாமல் தன்னால் கணினி, ஏர் பியூரிபையர், தொலைக்காட்சி உள்ளிட்டவற்றை கட்டுப்படுத்த முடிவதாக அவர் தெரிவித்துள்ளார். அரிசோனாவில் உள்ள சமுதாய கல்லூரியில் தற்போது அவர் கல்வி பயின்று வருவதாகத் தகவல் வெளியாகி உள்ளது. கடந்த 2016ல் நீச்சல் பயிற்சியின் போது ஏற்பட்ட விபத்தை அடுத்த அவரது முதுகெலும்பு பாதிக்கப்பட்டது. அதன் பிறகு அவரது தோள்பட்டைக்கு கீழே உணர்வு மற்றும் இயக்கத்தை இழந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

“அறுவை சிகிச்சைக்கு முன்பாக எனது இரவு பொழுதை முழுவதும் தூங்காமல் செலவிட்டேன். பகல் முழுவதும் தூங்குவேன். யாரையும் நான் தொந்தரவு செய்ய விரும்பவில்லை. அதனால் அப்படி



இருந்தேன். உடல் அசைவின்றி இருந்த எனக்குள் ஏதேனும் நடக்கும் என்ற நம்பிக்கை மட்டும் உயிர்ப்போடு இருந்தது.

இப்போது அறுவை சிகிச்சைக்கு பின்பு என்னால் நிறைய விஷயங்களை சுயமாக செய்ய முடிகிறது. அதன் மூலம் எனது வாழ்வு முழுமை பெற்றுள்ளது. எனது பொழுதை அர்த்தமுள்ள வகையில் செலவிட முடிகிறது. இந்த சிகிச்சையை எதிர்கொண்ட முதல் நபர் என்பதில் எனக்கு பெருமை. ஏனெனில், இந்த முயற்சி வெற்றி பெற்றால் மகிழ்ச்சி. தோல்வி கண்டிருந்தால் அது என்னை போன்றவர்களுக்கு அடுத்த முறை நிச்சயம் உதவும் என்று நம்பினேன். மூளையில் எனக்கு சிப் பொருத்தியதும் அதை முழுமையாக என்னால் கன்ட்ரோல் செய்ய முடியவில்லை. அது குறித்து நாங்கள் பொதுவெளியில் சொல்லவில்லை. நியூராலிங்க் குழுவினர் பின்னர் அதை சரி செய்தனர்.


இப்போது என்னால் சுமார் 10 மணி நேரம் வரை கணினி உள்ளிட்ட சாதனத்தை பயன்படுத்த முடிகிறது. மரியோகார்ட் கேம் விளையாடுகிறேன். தொழில் தொடங்கும் திட்டமும் உள்ளது. டெக்னிக்கலாக பார்த்தால் எனக்குள் சிப் பொருத்தப்பட்டுள்ளது. நான் Cyborg (எந்திரத்தின் உதவியால் ஆற்றல் பெற்ற மனிதர்) ஆக இருந்தாலும் இயல்பான மனிதரை போலவே உணர்கிறேன். இதோடு வாழ்வது வேடிக்கையானதும் கூட” என நோலண்ட் அர்பாக் தெரிவித்துள்ளார்.

நியூராலிங்க்: நியூராலிங்க் நிறுவனம் வடிவமைத்துள்ள எண்ணங்களை செயல்படுத்தும் வகையில் மூளைக்கும், கணினிக்குமான இன்டெர்ஃபேஸ் (BCI) இணைப்பை உருவாக்கும் வகையிலான ‘சிப்’ஐ மனிதனின் மூளையில் பொருத்தி சோதனையை மேற்கொண்டு வருகிறது. கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் குரங்குகளை வைத்து இந்த சோதனையை நியூராலிங்க் நிறுவனம் செய்திருந்தது.

இப்போது மனிதர்களுக்கு அதை பொருத்தி சோதனை மேற்கொண்டு வருகிறது. சோதனை அடிப்படையிலான இந்த ஆய்வுப் பணிகளை நியூராலிங்க் நிறுவனம் சுமார் 5 ஆண்டுகாலம் மேற்கொள்ளும் என சொல்லப்படுகிறது.

# இந்திய வான்பரப்பில் பாக். விமானம் பறக்க தடை நீட்டிப்பு


புதுடெல்லி: ஜம்மு காஷ்மீரின் பஹல்காமில் கடந்த ஏப்ரல் 22ம் தேதி நடந்த தீவிரவாத தாக்குதலைத் தொடர்ந்து, இந்திய வான்வெளியில் பாகிஸ்தான் விமானங்கள் பறக்க ஏப்ரல் 30 முதல் தடை விதிக்கப்பட்டது. இந்த தடை ஒவ்வொரு



மாதமும் நீட்டிக்கப்பட்டது.

இந்நிலையில், இந்தியா மீண்டும் பாகிஸ்தான் விமானங்களுக்கான வான்வெளி மூடலை செப்டம்பர் 24ம் தேதி வரை நீட்டித்துள்ளது. அதேபோல, பாகிஸ்தானும் இந்திய விமானங்களுக்கான வான்வெளி மூடலை செப்.24 வரை நீட்டித்துள்ளது. இது குறித்த தகவல் விமானிகளுக்கான அறிவிப்பில் (NOTAM) தெரிவிக்கப்பட்டு உள்ளது.

# ஸ்ரீ நாக கருமாரி அம்மன் கோயிலில் 47 ஆவது ஆடித் திருவிழா





ராணிப்பேட்டை, ஆக.26

ராணிப்பேட்டை மாவட்டம் ஆற்காடு பழைய BDO ஆபீஸ் எதிர் சந்தில் எழுந்தருளிக்கும் ஸ்ரீ நாக கருமாரி அம்மன் கோயிலில் (ஆகஸ்ட் 24) நேற்று 47 ஆண்டு ஆவது ஆடித் திருவிழா வெகு விமரிசையாக நடைபெற்றது . இதில் முதலாவதாக தாய் கரகம் திரு வீதி உலாவை நடைபெற்றது. அதனைத்தொடர்ந்து அம்மனுக்கு கூழ் வார்த்தல் மற்றும் பொங்கலிடுதல் முடிந்து பக்தர்கள் அலகு குத்தி தீச்சட்டி ஏந்தி தீமிதித்தனர். பின் அம்மனுக்கு பறந்து வந்து மாலை அணிவிக்கப்பட்டதைதொடர்ந்து ஆயிரம் பேருக்கு மேல் அன்னதானம் நடைபெற்றது. இதில் இந்து அறநிலையத் துறை தலைவர் லட்சுமணன், ஆற்காடு சட்டமன்ற உறுப்பினர் ஈஸ்வரப்பன், ஆற்காடு நகரமன்ற தலைவர் தேவி பென்ஸ் பாண்டியன் , 10 வது வார்டு செயலாளர் திமுக மேலாண்மை குழு தலைவர் முட்டை பழனி, சண்முகம் அம்பிகா ,சேகர், சுந்தரவேலு கலைச்செல்வி, கணேசன், குமரவேலு சசிகலா, தேவராஜ் வெண்ணிலா, கோயில் அறங்காவலர் மற்றும் ஊர் பொதுமக்கள் என அனைவரும் கலந்து கொண்டனர்.

### ஐ.டி.ஐ மாணவர் விடுதி வளாகத்தில்

# வித் யூ கல்வி மற்றும் சமூக அறக்கட்டளையின் சார்பில் 200க்கும் மேற்பட்ட மரச்செடி நடும் நிகழ்ச்சி



ஓசூர், ஆக.26

ஓசூர் மாநகராட்சிக்கு உட்பட்ட தேன்கனிக்கோட்டை சாலையில் அமைந்துள்ள அரசு தொழிற்பயிற்சி நிலையத்தில் ஐ.டி.ஐ மாணவர் விடுதி வளாகத்தில் வித் யூ கல்வி மற்றும் சமூக அறக்கட்டளையின் சார்பில் 200க்கும் மேற்பட்ட மரச்செடி கன்றுகளை மாநகர மேயர் S.A.சத்யாEx. MLA நட்டு வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் மாமன்ற உறுப்பினர் சென்னீரப்பா, மாநகரத் துணைச் செயலாளர் ரவிக்குமார், தெற்கு பகுதி துணை செயலாளர் மனோகரன், வட்டக் கழக செயலாளர்கள் தயாளன், சம்பத், மாநகர இளைஞர் அணி துணை அமைப்பாளர் சீனிவாசன், மாநகர மாணவர் அணி துணை அமைப்பாளர் செரிப், மற்றும் வார்டு கழக நிர்வாகிகள் சபரீஷ், நவீன் குமார், அஸ்வின், நிர்மல் குமார், ஜீவா வித் யூ கல்வி மற்றும் சமூக அறக்கட்டளையின் நிர்வாகிகள் மற்றும் பொதுமக்கள் மாணவ மாணவிகள் உடன் இருந்தனர்

# சுரண்டை நகராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் முகாமில் உடனடியாக பட்டா

## சேர்மன் வள்ளி முருகன் வழங்கினார்



சுரண்டை ,ஆக.26

சுரண்டை நகராட்சியில் நடைபெற்ற உங்களுடன் ஸ்டாலின் திட்டங்கள் பயன்பாடுகளுக்கு உடனடியாக பட்டாவை சேர்மன் வள்ளி முருகன் வழங்கினார்.

சுரண்டை நகராட்சி, சிவகுருநாதபுரம் முப்புடாதி அம்மன் கோவில் கலையரங்கில் வார்டுகளுக்கு உட்பட்ட உங்களுடன் ஸ்டாலின் திட்ட முகாம் நடைபெற்றது. இந்த முகாமில் 43 அரசு துறைகளைச் அலுவலர்கள் பங்கேற்றனர் .முகாமிற்கு சுரண்டை நகராட்சி ஆணையாளர் ராமதிலகம், வீ.க.புதூர் தாசில்தார் வெங்கடேஷ் ஆகியோர் தலைமை தாங்கினார்கள். நகர காங்கிரஸ் தலைவர் ஜெயபால், நகர திமுக பொறுப்பாளர் கூட்டுறவு கணேசன், சிவகுருநாதபுரம் இந்து நாடார் மகமை கமிட்டி நாட்டாமை தங்கையா நாடார் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

இந்த முகாமில் சுரண்டை சேர்மன் வள்ளிமுருகன் கலந்துகொண்டு முகாமை ஆய்வு செய்தார் அதை தொடர்ந்து சிவகுருநாதபுரம் கிராமத்தைச் சேர்ந்த ஏஞ்சல் என்பவருக்கு வருமானச் சான்றும், மாரிக்கனி, லட்சுமணன் ஆகியோருக்கு உடனடியாக பட்டா வழங்கினார். அதைத்தொடர்ந்து சேர்மன் வள்ளி முருகன் பேசியதாவது இந்த முகாம் பொதுமக்கள் அலைச்சலை குறைத்து அவர்கள் வசிக்கும் பகுதிக்கே அரசு அதிகாரிகள் வந்து சேவை செய்ய வேண்டும் என்ற உயர்ந்த நோக்கத்தில் இந்த முகாமை தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் உத்தரவின் பேரில் தமிழ்நாடு முழுவதும் நடைபெற்று வருகிறது.

முகாமில் கலந்து கொள்ளும் பொது மக்களுக்கு மின் இணைப்பு பெயர் மாற்றம், குடிநீர் இணைப்பு பெயர் மாற்றம் போன்ற சேவைகள் உடனடியாக வழங்கப்படுகிறது. சான்றிதழ்கள் சரியாக இருக்கும் பட்சத்தில் பட்டா உள்ளிட்ட அனைத்து சேவைகளும் உடனடியாக வழங்கப்படுகிறது. மேலும் மருத்துவ சேவையும் வழங்கப்படுகிறது. பொதுமக்கள் இதை பயன்படுத்திக் கொள்ள வேண்டுமென பேசினார்.

முகாமில் சமூக பாதுகாப்புத் திட்ட வட்டாட்சியர் ஒசன்னா பெர்னாண்டோ, தலைமையிடத்துத் துணை வட்டாட்சியர் சீனிப்பாண்டி, மண்டலத் துணை வட்டாட்சியர் கோசலராணி, குறுவட்ட வருவாய் ஆய்வாளர் முருகேஸ்வரி, கிராம நிர்வாக அலுவலர் சுதர்சன பாண்டியன், கவுன்சிலர்கள் வேல்முத்து, பாலசுப்ரமணியன், அமுதா சந்திரன், உஷா பேபி பிரபு, மாரியப்பன், சமுத்திர கொத்தனார், ஆனந்த் மற்றும் ஏராளமான பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் ஊராட்சி ஒன்றியம், தாயனூர் ஊராட்சியில், தமிழ்நாடு அரசின் சாதனைகள் மற்றும் வளர்ச்சித் திட்டங்கள் குறித்து பொதுமக்கள் அறிந்து கொள்ளும் வகையில் செய்தி மக்கள் தொடர்புத்துறை சார்பில் புகைப்படக்கண்காட்சி நடைபெற்றது.

# மணவாள நகர் ஒண்டிகுப்பத்தில் முதல்வர் திறந்து வைத்த ஐடிஐ - ஆட்சியர், எம்எல்ஏ பார்வை

திருவள்ளூர், ஆக.26

மணவாளநகர் அடுத்துள்ள ஒண்டி குப்பத்தில் ஐடிஐ முதல்வர் மு க ஸ்டாலின் திறந்து வைத்ததை அடுத்து திருவள்ளூர்மாவட்டஆட்சியர்மு.பிரதாப்,திருவள்ளூர் சட்டப்பேரவை உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் பார்வையிட்டனர்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின், சென்னை= தலைமைச் செயலகத்தில் தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் 19 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை திறந்து வைத்தார்.

இதை தொடர்ந்து திருவள்ளூர் வட்டம், ஒண்டிக்குப்பம், மு.க.ஸ்டாலின் தெரு, சண்முக பத்மாவதிபுரம் பகுதியில் தற்காலிக கட்டடத்தில் செயல்படவுள்ள புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி. ராஜேந்திரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு குத்து விளக்கேற்றி, மாணவர்களுக்கு சேர்க்கைகான ஆணைகளை வழங்கினர்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு. க. ஸ்டாலின் சென்னை, தலைமைச் செயலகத்தில தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டுத் துறை சார்பில் ரூ. 173.86 கோடி ரூபாய் செலவில், 19 புதிய அரசு தொழிற்பயிற்சி நிலையங்களை திறந்து வைத்தார்,

இதை தொடர்ந்து திருவள்ளூர் வட்டம், ஒண்டிக்குப்பம், மு.க.ஸ்டாலின் தெரு, சண்முக பத்மாவதிபுரம் பகுதியில் தற்காலிக கட்டடத்தில் செயல்படவுள்ள புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையத்தை மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் மற்றும் திருவள்ளூர் சட்டமன்ற உறுப்பினர் வி.ஜி.ராஜேந்திரன் ஆகியோர் நேரில் சென்று பார்வையிட்டு குத்து விளக்கேற்றி, மாணவர்களுக்கு சேர்க்கைகான ஆணைகளை வழங்கினர்.

தொழிலாளர் நலன் மற்றும் திறன் மேம்பாட்டு துறையில், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சியின் கீழ் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் உறுப்பினர்களின் குழந்தைகள் மற்றும் அவர்களை சார்ந்துள்ளோர் பயன் பெறும் வகையில் 7 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள் நிதி மற்றும் சுற்றுச்சூழல் பருவநிலை மாற்றம் துறை அமைச்சர் அவர்களால் 2025 சட்டமன்ற நிதிநிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டதை தொடர்ந்து. 2026 ஏற்கனவே அறிவித்த 12 தொழிற் பயிற்சி நிலையங்களுடன் சேர்த்து மொத்தம் 19 அரசு தொழிற் பயிற்சி நிலையங்களை தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் காணொளி காட்சி வாயிலாக தொடங்கி வைத்தார்.

கிருஷ்ணகிரி மாவட்டம் கிருஷ்ணகிரியில் சுமார் 25 கோடி மதிப்பில் தொடங்கப்பட்டுள்ள அரசு தொழிற் பயிற்சி நிலையத்தில் தேர்வு செய்யப்பட 35 மாணவர்களுக்கு சேர்க்கை ஆணை வழங்கி பயிற்சிகள் துவக்கி வைக்கப்படவுள்ளது.

இத்தொழிற் பயிற்சி நிலையம் ஆண்டிற்கு சுமார் 172 மாணவர்கள்பயன்பெறும்வகையில் 4 ஈராண்டு தொழிற் பிரிவுகளும் 2 ஓராண்டு தொழிற்பிரிவுகளும் மொத்தம் 6 தொழிற்பிரிவுடன் செயல்பட உள்ளது. இத் தொழிற்பயிற்சி நிலையத்தில் மேலும் காலியாக உள்ள இடங்களுக்கு நேரடி சேர்க்கை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

தொழிற்பயிற்சி பெறுபவர்களுக்கு மத்திய அரசு வழங்கும் தேசிய தொழிற்சான்றிதழ் வழங்கப்படுகிறது. இச் சான்றிதழ் பெற்றவர்களுக்கு அரசு மற்றும் பொதுத்துறை நிறுவனங்களிலும் தனியார் நிறுவனங்களிலும் நல்ல ஊதியத்தில் உடனடியாக வேலைவாய்ப்பு உள்ளது.

மேலும் தொழிற்பயிற்சி பெற்று சான்றிதழ் பெற்றவர்கள் ஓராண்டு தொழிற்பழகுநர் பயிற்சியும் பெறுவதன் மூலம் தேசிய தொழிற்பழகுநர் சான்றிதழும் கிடைக்கிறது. இவ்விரு சான்றிதழ்களும் நல்ல வேலை வாய்ப்பு பெறுவதற்கும் அரசு வேலைவாய்ப்பில் முன்னிலையும் மேலும் வயதுவரம்பில்ஓராண்டு சலுகையும் உள்ளது.

ஆகவே பத்தாம் வகுப்பு கல்வித் தகுதி மற்றும் அதற்கு மேற்பட்ட கல்வி தகுதி உடைய 14 முதல் 40 வரை உள்ள ஆண் பெண் இருபாலரும் சேர்ந்து பயன்பெறலாம்.

மேலும் மகளிர்க்கு உச்ச வயது வரம்பு ஏதும் இல்லை. இப்பயிற்சி நிலையத்தில் பயிற்சி பெறுபவர்களுக்கு அரசு வழங்கும் சலுகைகளாக மாத உதவித்தொகை ரூ.750 மற்றும் தமிழ் புதல்வன் புதுமைப்பெண் திட்டத்தின் கீழ் அரசு பள்ளியில் பயின்ற மாணவ மாணவிகளுக்கு மாதம் ரூ.1000 வழங்கப்படுகிறது.

மேலும் கட்டுமான தொழிலாளர் நல வாரியத்தின் மூலமாக ஐடிஐ பயிற்சி பெறுபவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ. 3000 வழங்கப்படுகிறது.தமிழ்நாடு முதலமைச்சர், வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் கட்டுமான தொழிலாளர் வாரிசுதாரர்களுக்கு புதிய அரசினர் தொழிற்பயிற்சி நிலையம், திருவள்ளூர் ஒண்டிக்குப்பம், பகுதியில் காணொளி மூலம் துவக்கப்பட்டது.

இத்தொழிற்பயிற்சி நிலையத்தில் மாணவர்கள் வாழ்க்கையில் முன்னேற 6 தொழிற்பயிற்சி வகுப்புகள் தொடங்கப்பட்டுள்ளன. 208 பயிற்சியாளர்களுக்கு தொழிற்பயிற்சி வழங்கப்ப டவுள்ளது.

எனவே இந்த அரிய வாய்ப்பை பயன்படுத்தி ஐடிஐ பயிற்சியில் சேர்ந்து பயன் பெற வேண்டும் என மாவட்ட ஆட்சித் தலைவர் மு.பிரதாப் கேட்டுக்கொண்டார்.

இந்நிகழ்வில் ஐடிஐ முதல்வர் து. சித்ரா, கடம்பத்தூர் வட்டார வளர்ச்சி அலுவலர் நடராஜன், வெங்கத்தூர் ஊராட்சி செயல் அலுவலர் பெருமாள், திருவள்ளூர் வட்டாட்சியர் ரஜினி, ஐடிஐ ஆசிரியர்கள் மற்றும் அலுவலர்கள் உள்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேமுதிக நிறுவனத்தலைவர் விஜயகாந்த்பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் எம்.வாசுதேவன் தலைமையில் பொதுமக்களுக்கு அன்னதானம்





ஈரோடு, ஆக.26

தேமுதிக நிறுவனத்தலைவர் விஜயகாந்த் பிறந்தநாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட துணைச் செயலாளர் எம் வாசுதேவன் தலைமையில் பொதுமக்களுக்கு அன்னதானம் வழங்கப்பட்டது

தேமுதிக நிறுவனரும், முன்னாள் சட்டமன்ற எதிர்க் கட்சித் தலைவருமான கேப்டன் விஜயகாந்த் பிறந்த நாளை முன்னிட்டு ஈரோடு வடக்கு மாவட்ட தேமுதிக சார்பாக நம்பியூர் பேருந்து நிலையத்தில் ஈரோடுவடக்கு மாவட்ட துணைசெயலாளரும், கோபி சட்டமன்றத் தொகுதி பொறுப்பாளரு மான எம்.வாசுதேவன் தலைமையில் பொதுமக்கள் 1000க்கும் மேற்பட்டோருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.

நிகழ்ச்சியில் ஒன்றிய செயலாளர் கே. பொன்னுசாமி , அவைத்தலைவர் மோகன் நிவாஸ், பொருளாளர் பால சுப்ரமணியன் , ஒன்றிய துணை செயலாளர்கள் சசிக்குமார், என் விஸ்வநாதன், ஊராட்சி செயலாளர்கள் பொன்னுச்சாமி, வி. பெருமாள், மாவட்ட ஐ.டி.விங் அய்யாசாமி, கே.பி.விஜயக்குமார், வெட்டையம்பாளையம்வெங்கடேஷ், உட்பட தேமுதிக நிர்வாகிகள் கலந்துகொண்டனர்.

# திருச்சி ப்ரண்ட்லைன் மருத்துவமனையில் உயிர்காக்கும் புதிய அதிநவீன (கேத் லேப்) இதய வடிகுழாய் சிகிச்சை பிரிவு ஆரம்பம்

திருச்சி, ஆக.26

திருச்சி அண்ணாசிலை அருகில் உள்ள ப்ரண்ட் லைன் மருத்துவமனை கடந்த 15 ஆண்டுகளாக மக்கள் (மருத்துவ பணியில்) சேவையாற்றி வருகிறது.



இந் நிலையில் திருச்சிராப்பள்ளி மாவட்டத்தில் முதல் முறையாக மருத்துவத்துறையில் ஓர் புதிய அதிநவீன அத்தியாயம் கேத் லேப் எனப்படும் (உச்சி முதல் உள்ளங்கால் வரை) ஏற்படக்கூடிய ரத்தக்குழாய் மற்றும் இதய நரம்பு சம்பந்தப்பட்ட நோய்களை குணப்படுத்தக்கூடிய புதியதோர் அதிநவீன மருத்துவ பிரிவு தொடங்கப்பட்டுள்ளது.

திருச்சி ப்ரண்ட்லைன் மருத்துவமனையில் பொது அறுவை சிகிச்சைகள், லேப்ராஸ்கோப்பி அறுவை சிகிச்சைகள், சிறுநீரக மருத்துவ மற்றும் அறுவை சிகிச்சைகள், எலும்பு மூட்டு சம்பந்தப்பட்ட நோய்களுக்கு சிறப்பான சிகிச்சை அளித்து வருகின்றனர்.

இப்போது அதிநவீன (சீமென்ஸ்) கேத்லேப் தொடங்கப்பட்டுள்ளது. இது மேலும் பல நோயாளிகளுக்கு சிறப்பான சிகிச்சை அளிக்க உதவும். இதன் மூலம் இங்கே மூளை, நரம்பு, தண்டுவடம், இதயம், கை கால், ரத்தக்குழாய் அடைப்புக்கு ஆஞ்சியோகிராம், ஆஞ்சியோ பிளாஸ்டி, ஸ்டெண்ட் வைப்பது உள்ளிட்ட ரத்தக்கட்டியை எடுக்கும் ஒரு புதிய மருத்துவத்தை (நுண் துளை ஊசி மூலம்) சிகிச்சை செய்யப்படும் புதிய அதிநவீன சிகிச்சை தொடங்கப்பட்டுள்ளது.

இந்நிகழ்வு திருச்சி ப்ரண்ட்லைன் மருத்துவமனை நிர்வாக இயக்குநர், பொது மற்றும் லேப்ராஸ் கோப்பி அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் எஸ்.ராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது.

இதில், திருச்சியின் மூத்த மருத்துவர் டாக்டர் எஸ். பொன்னையா, திருச்சியின் மூத்த நரம்பியல் நிபுணர் டாக்டர்.ஆர்.சுந்தரராஜன், பாண்டிச்சேரி ஏ.ஜி.பத்மாவதி மருத்துவமனை தலைவர், டாக்டர் ஜி.இளங்கோவன், தமிழ்நாடு இதயவியல் சமூகத்தின் தலைவர் டாக்டர். ஜவகர் பரூக், ப்ரண்ட்லைன் மருத்துவமனையின் தலையீட்டு ஆலோசகர்கள் நரம்பியல் நிபுணர் டாக்டர் எஸ்.அருண்பிரனவ், இருதயவியல் நிபுணர் டாக்டர் என்.கணேஷ், செருகுகுழல் நாளஞ்சார் அறுவை சிகிச்சை நிபுணர் டாக்டர் சி.ஆனந்த், கதிரியக்கவியல் நிபுணர் டாக்டர் பெரியகருப்பன் உள்ளிட்ட மருத்துவத் துறையின் முன்னோடிகள், மருத்துவமனையின் அனைத்து பணியாளர்கள், நண்பர்கள், உறவினர்கள், குடும்பத்தினர்கள் கலந்து கொண்டு வாழ்த்தினர்.

# விளையாட்டு செய்திகள்

## ஆசிய துப்பாக்கிச்சூடுதல்: ஐஸ்வரி பிரதாபுக்கு தங்கம்



ஷிம்கென்ட்: கஜகஸ்தானின் ஷிம்கென்ட் நகரில் ஆசிய துப்பாக்கி சுடுதல் சாம்பியன்ஷிப் நடைபெற்று வருகிறது. இதில் ஆடவர் 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன் பிரிவில் இந்திய வீரர் ஐஸ்வரி பிரதாப் சிங் தோமர் தங்கப் பதக்கம் வென்றார்.

நடைபெற்ற போட்டியில் தோமர் 462.5 புள்ளிகள் குவித்து முதலிடம் பிடித்தார். சீன வீரர் வென்யு ஜாவோ 462 புள்ளிகளுடன் வெள்ளியையும், ஜப்பானின் நயோயா ஒகாடா445.8புள்ளிகளுடன்வெண்கலத்தையும்வென்றனர். முன்னதாக 50 மீட்டர் ரைபிள் 3 பொசிஷன் அணி பிரிவில் இந்தியாவின் தோமர். செயின் சிங், ஷிரோன் ஆகியோர் அடங்கிய அணி 2வது இடத்தைப் பிடித்து வெள்ளியை வென்றது.

## ஓய்வை அறிவித்தார் இந்திய கிரிக்கெட் வீரர் புஜாரா

அனைத்து விதமான இந்திய கிரிக்கெட்டில் இருந்தும் ஓய்வு பெறுவதாக புஜாரா அறிவித்துள்ளார். இந்திய டெஸ்ட் அணியில் சிறப்பான பங்களிப்பை வழங்கியவர் அவர் என்பது குறிப்பிடத்தக்கது.

37 வயதான புஜாரா இந்திய அணியின் சீனியர் வீரர்களில் ஒருவராக திகழ்ந்தார். டெஸ்ட் அணியில் ரெகுலர் பேட்ஸ்மேனாக சர்வதேச கிரிக்கெட்டில் விளையாடி வந்தார். கடைசியாக கடந்த 2023ல் ஆஸ்திரேலிய அணிக்கு எதிரான ஐசிசி டெஸ்ட் சாம்பியன்ஷிப் இறுதிப் போட்டியில் விளையாடி இருந்தார். அதன் பின்னர் அவருக்கு அணியில் வாய்ப்பு மறுக்கப்பட்டது.



இந்திய அணிக்காக 103 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி, 7195 ரன்கள் குவித்துள்ளார். இதில் 19 சதங்கள் மற்றும் 35 அரை சதங்கள் அடங்கும். டெஸ்ட் கிரிக்கெட்டில் இவரது பேட்டிங் சராசரி 43.61. மொத்தம் 16,217 பந்துகளை எதிர்கொண்டுள்ளார்.

டெஸ்ட் போட்டியில் விளையாடுவதன் மூலம் இந்திய அணிக்காக 100 டெஸ்ட் போட்டிகளில் விளையாடிய 13வது இந்தியர் என்ற பெருமையை பெற்றவர். கடந்த 2010ல் இதே ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக அறிமுக வீரராக டெஸ்ட் கிரிக்கெட்டில் விளையாட துவங்கினார்.

தடுப்புமுறை ஆட்டத்திற்கு பெயர் போனவர். இக்கட்டான சூழலில் அணியின் மீட்பராக செயல்பட்டு விளையாடும் திறன் படைத்தவர். களத்தில் எதிரணி பவுலர்கள் சிறப்பாக வீசும் பந்தை அறிந்து அதை ஆடாமல் அப்படியே லீவ் செய்யும் கலையில் கைதேர்ந்தவர்.

இந்திய அணிக்காக (ஆல்டைம்) டெஸ்ட் கிரிக்கெட்டில் அதிக ரன்கள் எடுத்த வீரர்களில் 8வது இடத்தில் உள்ளார். ஆஸ்திரேலிய அணிக்கு எதிராக 25 டெஸ்ட் போட்டிகளில் விளையாடி 2,074 ரன்களை சேர்த்துள்ளார். 5 சதங்கள் மற்றும் 11 அரை சதங்கள் இதில் அடங்கும். ஆஸ்திரேலியாவுக்கு எதிராக அவரது பேட்டிங் சராசரி 49.38. இந்திய அணிக்காக 5 ஒருநாள் கிரிக்கெட் போட்டிகளில் விளையாடி உள்ளார். முதல் தர கிரிக்கெட்டில் 21,000 ரன்களை கடந்துள்ளார்.

இந்த சூழலில் சுமார் இரண்டு ஆண்டு காலமாக இந்திய அணியில் அவருக்கு வாய்ப்பு கிடைக்கவில்லை. உள்ளூர் கிரிக்கெட்டில் சிறப்பாக செயல்பட்டும் இந்த நிலை தொடர்ந்தது. இதே நிலை ரஹானேவும் எதிர்கொண்டு வருகிறார். அண்மையில் முடிந்த இங்கிலாந்து தொடருக்கு முன்னதாக கோலி மற்றும் ரோஹித் சர்மா என இருவரும் டெஸ்ட் கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெறுவதாக அறிவித்தனர். இந்த சூழலில் புஜாராவும் இப்போது ஓய்வு அறிவித்துள்ளார்.

“இந்திய அணியின் ஜெர்ஸியை அணிந்து கொண்டு, தேசிய கீதம் பாடி, ஒவ்வொரு முறை ஆட்டக்களத்தில் களம்காணும் போது என்னுடைய சிறந்த ஆட்டத்தை வெளிப்படுத்த முயல்வேன். இந்த உணர்வை வெறும் வார்த்தைகளால் வெளிப்படுத்த முடியாது. அனைத்து நல்ல விஷயத்துக்கும் ஒரு முடிவு உண்டு என எல்லோரும் சொல்வதுண்டு. அனைத்து விதமான இந்திய கிரிக்கெட்டில் இருந்தும் நான் ஓய்வு பெற்றுக் கொள்கிறேன். இதை மிகுந்த நன்றியுடன் தெரிவித்துக் கொள்கிறேன். தேங்க் யூ” என தனது சமூக வலைதள பதிவில் புஜாரா கூறியுள்ளார்.

# சினிமா செய்திகள்

## விஜய் படங்களை மிஸ் செய்வோம்: அனிருத் உருக்கம்



இனி படங்களில் நடிக்கப் போவதில்லை என விஜய் அறிவித்துள்ளதால் அவரை படங்களில் இருந்து மிஸ் பண்ண உள்ளதாக அனிருத் உருக்கமாக தெரிவித்துள்ளார்.

சிவகார்த்திகேயன் நடித்துள்ள ‘மதராஸி’ படத்தின் இசை வெளியீட்டு விழா சென்னையில் நடைபெற்றது. இதில் படக்குழுவினர் அனைவரும் கலந்துக் கொண்டனர். இந்த விழாவில் இசையமைப்பாளர் அனிருத் பத்திரிகையாளர்கள் மத்தியில் பேசினார்.

அப்போது "‘லியோ’, ‘ஜனநாயகன்’ மற்றும் அரசியலுக்கு விஜய் சென்றது குறித்த கேள்விகளுக்கு அனிருத், ’லியோ’ படத்தின் ட்ராக்குகளைதனித்தனியாகவெளியிட்டுவிட்டோம். அதனால் தான் மொத்தமாக OST ஆக வெளியிடவில்லை. அனைத்தையும் சேர்த்து விரைவில் வெளியிட்டுவிடலாம். ’ஜனநாயகன்’ படத்தின் இசை அருமையாக வந்திருக்கிறது. ‘மதராஸி’ வெளியானவுடன் முழுமையாக அப்படத்தில் தான் கவனம் செலுத்தவுள்ளேன்.

விஜய் சாருடன் பணிபுரிந்த படங்களின் பாடல்கள் அனைத்துமே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளன. பாடல்களைத் தாண்டி அதனை விஜய் சார் திரையில் கொண்டு வரும் போது அதற்கு பெரிய மதிப்பு இருக்கும். விஜய் சாரை படங்களில் இருந்து மிஸ் பண்ணவுள்ளோம்” என்று அனிருத் தெரிவித்துள்ளார்.

## தெலுங்கில் அறிமுகமாகிறார் ரவீனா டாண்டன் மகள்!

பிரபல இந்தி நடிகை ரவீனா டாண்டன், 90களில் அர்ஜுனுடன் ‘சாது’, கமலுடன் ‘ஆளவந்தான்’ படங்களில் நடித்திருக்கிறார். ‘கே.ஜி.எஃப் 2’ படத்திலும் நடித்துள்ள இவருக்கு ராஷா தடானி, ரன்பிர் வர்தன் என மகள், மகன் உள்ளனர். இவர் பூஜா, சாயா ஆகிய பெண் குழந்தைகளையும் தத்தெடுத்து வளர்த்து வருகிறார்.



ரவீணாவின் மகள் ராஷா, ‘ஆசாத்’ என்ற இந்திப் படத்தில் அறிமுகமானார். இந்தப் படம் வெற்றி பெறவில்லை என்றாலும், ராஷா இடம்பெற்ற பாடல்ஹிட்டானது.இணையத்திலும்வைரலானது. இப்போது ராஷா, தெலுங்கில் நாயகியாக அறிமுகமாகிறார்.

பிரபல தெலுங்கு ஹீரோ மகேஷ்பாபுவின் சகோதரர் ரமேஷ் பாபுவின் மகன் ஜெய கிருஷ்ணா ஹீரோவாக அறிமுகமாகிறார். இந்தப் படத்தை அஜய் பூபதி இயக்குகிறார். இவர் தெலுங்கில் வெற்றி பெற்ற ‘ஆர்எக்ஸ் 100’, ‘மங்களவாரம்’ ஆகிய படங்களை இயக்கியவர்.

இளமையான காதல் கதையை கொண்ட இந்தப் படத்தில் ஜெய கிருஷ்ணா ஜோடியாக, ராஷா அறிமுகமாக இருக்கிறார். இது தொடர்பான அதிகாரப்பூர்வ அறிவிப்பு விரைவில் வெளியாக இருக்கிறது.

உள்ளாட்சி சாரல் நாளிதழில் வெளியாகும் விளம்பரங்களின் உண்மைத்தன்மைக்கு நிர்வாகம் பொறுப்பல்ல. பத்திரிகை பதிவு மற்றும் புத்தக சட்ட விதிகளின்படி உள்ளாட்சி சாரல் நாளிதழின் சம்பந்தப்பட்ட வழக்குகள் அனைத்தும் சென்னையில் உள்ள உரிய நீதிமன்றங்களின் வரம்பிற்கு மட்டுமே உட்பட்டது என்பதை அறியவும்.